# The Morning Star

*A Christian Publication*

# உதயதாரகை

*Established 1841*

*Subscription Rs.100/= (postage Separate)*

*The Morning Star*
*CACM Head Office*
*Christian Theological Seminary*
*Maruthanarmadam*
*Chunnakam*
*Sri Lanka.*

***Righteousness Exalteth A Nation. But Sin is a Reproach to any people.***

***Email: themorningstar1841@gmail.com - Vol. 184 - Jaffna - Friday, 10th October 2025 - No. 03 - Web: www.cacmchurch.com***


## CACM திருச்சபைத் தலைவரின் உத்தியோகபூர்வ அமெரிக்கா விஜயம்

கிறிஸ்துவுக்குள் ஒன்றுபட்ட திருச்சபையினுடைய (United Church of Chist – UCC) செனற் (Synod) மகாசபையின் கூட்டத்தொடர் இவ்வருடம் (2025) அமெரிக்க ஐக்கிய நாட்டினுடைய மிசூரி (Missouri) மாநிலத்தின் கென்சஸ் நகரத்தில் (Kensas City) 10.07.2025 வியாழக்கிழமை தொடக்கம் 16.07.2025 புதன்கிழமை வரை மிகச் சிறப்பாக நடைபெற்றது. இக்கூட்டத்தொடரானது மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை நடைபெறுவது வழமை. அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள 50 மாகாணங்களில் 36 மாகாணங்களில் உள்ள குருமார், சபைப் பிரதிநிதிகள், அலுவலர்கள் பங்களித்துவ திருச்சபைத் தலைவர்கள், விருந்தினர்கள் உள்ளடங்கலாக ஏறத்தாழ 4500 பேர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டிருந்தனர்.




ஆறு வருடங்கள் UCC இன் தலைவராக விளங்கிய அருட்கலாநிதி. கரன் ஜோர்ஜியா தொம்சன் அவர்களுடைய தலைமைத்துவத் துடனும் ஆரம்ப வழிபாட்டுடனும் கூட்டத் தொடர்

(11ஆம் பக்கம் பார்க்க)

## நீ விசேடமானவன் (ள்)
### விடுமுறை வேதாகம பாடசாலை

ஞாயிறு பாடசாலை பிள்ளைகளுக்கான விடுமுறை வேதாகமப் பாடசாலை "நீ விசேடமானவன்(ள்)



("You are special") என்ற தொனிப்பொருளில் சிறப்புற நடைபெற்றுள்ளன. இந்நிகழ்வானது யாழ் மற்றும் வன்னி பிராந்தியங்களின் பிள்ளைகளை இணைத்து ஆகஸ்ட் மாதம் 13ம், 14ம் திகதிகளிலும் கொழும்பு மற்றும் மலையகம் பிராந்தியங்களின் பிள்ளைகளை இணைத்து ஆகஸ்ட் மாதம் 16ம், 17ம் திகதிகளிலும் கிழக்குப் பிராந்திய பிள்ளைகளை

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ் பிராந்திய பிள்ளைகள் விழா

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை, யாழ் பிராந்திய சமய கல்விக்குழுவின் வருடாந்த பிள்ளைகள் விழா 13.09.2025 அன்று "நல்ல




விதைகளை நம்பிக்கையுடன் விதைப்போம்" எனும் கருப்பொருளில் சமயக்கல்விக்குழுவின் இயக்குநர் அருட்பணி. சுதாசினி சுதாகரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

காலை 08:30 மணிக்கு மருதனார்மடம் அருளகம் முன்றலிலிருந்து ஆரம்பமான திருச்சபை விசுவாசிகளின் சாட்சியப்பவணி கிறிஸ்தவ இறையியல் கல்லூரியை அடைந்தது. காலை வழிபாட்டினை உடுவில் திருச்சபை ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகளினால் நடாத்தப்பட்ட இவ் வழிபாட்டில் அருட்தந்தை. ஜெராட் அவர்கள் கருப்பொருளை அடிப்படையாக கொண்டு இறை செய்தியை பகிர்ந்தார்.

வழிபாட்டினைத் தொடர்ந்து யாழ் பிராந்திய திருச்சபை பிள்ளைகளுக்கிடையிலான கீர்த்தனைப் பாடல், ஞானப்பாடல் மற்றும் ஆங்கில பாடல்

(07ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் ஆகஸ்ட் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 08:30 மணிக்கு கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் உள்ள கிறிஸ்தவ மன்றத்தின் கேட்போர் கூடத்தில் இலங்கை திருச்சபையின் குருநாகல் மறை மாவட்ட பேராயர் பேரருள்மிகு நிஷாந்த் பெர்ணாண்டோ தலைமையில் நடைபெற்றது. தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ஒருங்கிணைப்பில் உள்ள திருச்சபை தலைவர்கள் பிரதிநிதிகள் ஒருமைப்பாட்டு நிறுவனத் தலைவர்கள் இதில் கலந்து கொண்டனர். செயலாளர் அருட்பணி சுஜிதர் சிவநாயகம் அவர்களுடைய ஒருங்கமைப்பில் கூட்டம் நடைபெற்றது. NCCயின்

(09ஆம் பக்கம் பார்க்க)

## மூலோபாய திட்டமிடல்

கிறிஸ்தவ இறையியல் கல்லூரி தனது இந்தியாவிலிருந்து எதிர் காலத்துக்கான மூலோபாய திட்டமிடலினை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இத்திட்டமிடலுக்கு உதவி செய்வதற்காக அருட்கலாநிதி. டேவிட் செல்வராசா



அவர்களும், அருட்கலாநிதி. தீனபந்து மஞ்சாளா அவர்களும் அருட்சகோதரி கலாநிதி. ரசிக்க பிரிஸ் களனியிலிருந்தும் இறையியல் கல்லூரிக்கு வருகை தந்து 14.07.2025ல் இருந்து 16.07.2025 வரையான காலப்பகுதியில் இறையியல் கல்லூரியில்

(11ஆம் பக்கம் பார்க்க)

## CCA மாநாடு
### (Conference)

கடந்த 30-08-2025 முதல் 03-09-2025 வரை nf hO k G The Economical Institute for Study and Dialog (EISD) என்ற ஒருமைப்பாட்டு களத்தில்



ஆசிய நாடுகளின் இறையியல் கல்லூரிகளில் இறையியல் கல்வி நிறைவு செய்து பணிகளத்திற்குச் செல்லவிருக்கும் குருத்துவ மாணவர்களுக்கு நிர்வாகம், நற்காப்பாளர், தலைமைதுவ

(04ஆம் பக்கம் பார்க்க)

ஆசிரியர் பேனாமுனையில்...

# சோதனைகள் வேதனைகளில்

## கை கொடுக்கும் திருமறையின் போதனைகள் !!!!

அன்பானவர்களே, எமது வாழ்வில் பல சோதனைகள் வேதனைகளால் நாம் அங்கலாய்க்கக்கூடும். எதிர்பாராத ஆய்க்கினைகள் எம் வாழ்வைப் புரட்டிப்போடக் கூடும். வாழ்க்கை எனும் படகுப் பயணத்தில், புயல் அடிக்கும், பெருமழை பொழியும், எமது படகு பல்வேறு வேளைகளில் ஆட்டம் காணும். ஆனால் படகு கவிழ்ந்து விடாதபடி பார்த்துக் கொள்கிறவர் எமது பக்கத்தில் உள்ளார் என்பதே எமக்கு ஆறுதல் அளிக்கும் விடயம்.

ஒரு முறை ஒரு இராஜா தன் நாட்டிலுள்ள ஓவியர்களுக்கு ஒரு போட்டி வைத்தார். அமைதியை உணர்த்தக் கூடியதாகவும், பார்த்தால் சமாதானம் தென்படக் கூடியதாகவும் ஒரு படம் வரைய வேண்டும் என்பதே அந்தப் போட்டி. அனேகர் இந்தப் போட்டியில் கலந்து கொண்டனர். இறுதியில் 2 ஓவியங்கள் மாத்திரமே தெரிந்தெடுக்கப்பட்டன.

*முதலாவது படம்* :– அமைதியான ஒரு ஏரி. அதைச் சுற்றிலும் அழகான மரங்கள். அதற்குப் பின்னால் நீல நிற மலைகள். அவை கண்ணாடியைப் போல் அந்த ஏரியில் பிரதிபலித்தன. மேலே நீல நிற வானில் தவழ்ந்து செல்லும் மேகங்கள் மிக அருமையாக இருந்தன. அழகான அந்த சித்திரத்துக்குத் தான் முதற்பரிசு கிடைக்கும் என்பதே பலரது கருத்தாக இருந்தது.

***இரண்டாவது படம்*** :– மலைகள், அவை கரடுமுரடாக, ஒழுங்காக இல்லாமல் இருந்தது. வானத்திலிருந்து மழை கொட்டிக் கொண்டிருந்தது. மின்னல்கள் வானத்தைக் கிழித்துக் கொண்டிருந்தன. மலையின் நடுவில் ஒரு நீர் வீழ்ச்சி, அது கூட் ஆக்ரோசமாகவே தண்ணீரில் பாய்ந்து கொண்டிருந்தது. அந்தப்படத்தில் அமைதி என்று சொல்வதற்கு இடமே இல்லை. அந்தப் படத்தை இராஜா பார்த்துக் கொண்டிருந்த போது, அந்த நீர் வீழ்ச்சியின் பக்கத்தில், ஒரு பாதையின் இடுக்கில், ஒரு பறவை தன் கூட்டைக் கட்டிக் கொண்டிருந்தது. அந்த நீர் வீழ்ச்சியின் ஓசைகளுக்கும், பாய்ச்சல்களுக்கும் நடுவில் அந்தக் கூட்டைக் கட்டிக் கொண்டிருந்த பறவை, தன் குஞ்சுகளுடன் அமைதியாக இருந்தது. இராஜா அந்தப் படத்தையே தெரிந்தெடுத்தார். ஏனெனில், அந்த இரைச்சல்களுக்கு மத்தியில் அந்தப்பறவை தன் கூட்டைக் கட்டிக் கொண்டிருக்கிறதே, அதுவே உண்மையான அமைதியாகும் என முடிவெடுத்து, அந்தப் படத்திற்கே இராஜா முதற்பரிசைக் கொடுத்தார்.

எல்லாம் அமைதியாக இருக்கும் போதோ, பிரச்சனைகள் இல்லாமல் இருக்கும் போதோ, கடுமையான சூழ்நிலைகள் இல்லாதிருக்கும்போதோ, வருவது அமைதி இல்லை. ஆனால் சமாதானம், சந்தோசம் என்பது, எல்லாமே தலைகீழாக இருக்கும்போது, பிரச்சனைக்கு மேல் பிரச்சனையும் நாம் நினைத்தராத காரியங்கள் எமக்கு எதிராக வரும்போது, அதன் பின் சமாதானமாகி, ஒரு அமைதியும் சமாதானமும் தோன்றுகிறதே, அதுவே உண்மையான சமாதானமாகும். இருள் இருக்கும்போது தான் ஒளி உணரப்படும். ஒளியே தொடர்ந்து இருக்குமானால் அதன் அருமை எமக்குப் புரியாது.

நமது வாழ்வில் எல்லாமே சரியாக இயங்கிக் கொண்டிருக்கும்போது, நாம் சமாதானத்தைக் குறித்தோ, சந்தோசத்தைக் குறித்தோ நினைப்பதில்லை. ஆனால் வாழ்வில் ஒரு புயல் வீசும் போது, நம் அமைதி கலைந்து போகிறது. ஆனால் கிறிஸ்து நமக்கு வாக்களித்துள்ளார். **“நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையும் குறித்து, உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள். அப்பொழுது எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தனைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக் கொள்ளும்”** (பிலிப்பியர் 4:6,7)

**“ஆபத்துக் காலத்தில் சோர்ந்து போவாயானால் உன் பெலன் குன்றினது”** (நீதி மொழிகள் 24:10) நாம் நமது பிரச்சனைகளைக் கர்த்தருக்குத் தெரியப்படுத்திய பின்பு, நிச்சயமாகவே எல்லாப் புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தால் நம் உள்ளம் நிரம்பியுள்ளதை நாம் உணர முடியும். ஏன்னதான் புயல் வரட்டும், என்ன தான் கடற்கொந்தளிப்பைப் போன்ற வாழ்க்கைப் பிரச்சனைகள் வரட்டும், நமக்கு சமாதானத்தையும் சந்தோசத்தையும் கொடுக்கிற தேவன் நமக்கு உண்டு. ஆகவே நாம் சோர்ந்து போக வேண்டாம். புயல்கள் மத்தியலும் நமக்கு அமைதி, சமாதானம் தருகிற தேவன் நமக்கு இருக்கும் போது, நாம் எதைக் குறித்தும் கலங்கத் தேவையில்லை.

**“ நான் கூப்பிட்ட நாளில் எனக்கு மறு உத்தரவு அருளினீர். என் ஆத்துமாவிலே பெலன் தந்து என்னைத் தைரியப்படுத்தினீர்”** (சங்கீதம் 138:3)

இத்துடன் நமது காரியம் நின்று விடவில்லை. இந்தப் பெரிய காரியத்தை எமக்குச் செய்யும் கர்த்தருக்கு சாட்சிகளாக சீவித்து, அவரது விசுவாச வீரர்களாக அவர் பணி செய்வது நமக்கு அவசியம். சிந்திப்போம் செயற்படுவோம்.

**ஏ.பி.ரி**

# அருட்பணி. V. N. தர்மகுலசிங்கம்
## 1979 –2008



அருட்பணி. V. N. தர்மகுலசிங்கம் அவர்கள் 1979, மே மாதம் 1ம் திகதி அராலித் திருச்சபையின் குருவாக நியமிக்கப்பட்டார். உடுப்பிட்டித் திருச்சபையைத் தாய்த் திருச்சபையாகக் கொண்ட இவர், உடுப்பிட்டியைச் சேர்ந்த சாமுவேல் பொன்னையா வீரவாகு அவர்களுக்கும் திருமதி மேபிள் நேசரட்ணம் வீரவாகு அவர்களுக்கும் மகனாக 4 சகோதரர்களுடனும் இரண்டு சகோதரிகளுடனும் 21.05.1943 இல் பிறந்தார். உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியில் கல்விகற்ற இவர், இறைவனது அழைப்பைப் பெற்று 1971ம் ஆண்டு மதுரையில் இருக்கும் தமிழ்நாடு இறையியல் கல்லூரிக்கு (TTS) இறையியல் பயிலச் சென்றார். 1975 இல் இறையியல் படிப்பை முடித்து B.Th பட்டதாரியாக நாடுதிரும்பிய இவர், தன்னுடைய இறைபணியினை நெடுந்தீவிலே ஆரம்பித்தார். இவர் தன்னுடைய வாழ்வுக்கும் இறைபணிக்கும் துணைவியாக ஏழாலை வடக்கைச் சேர்ந்த திரு.திருமதி. தேவதாசன் அவர்களது மகள் மேரி தேவபுஸ்பம் என்பவரைத் திருமணம் செய்து கொண்டார் இவர்களுக்குச் சாமுவேல் தேவானந், டானியல் தயானந் எனும் இரு புதல்வர்களைக் கடவுள் அருளிச் செய்தார். நெடுந்தீவில் இறைபணியாற்றிய வேளையில் 05.09.1978 இல் உதவிக் குருவாக அருட்பொழிவு பண்ணப்பட்ட இவர், அளவெட்டி, சண்டிலிப்பாய்த் திருச்சபைகளின் ஊழியனாகக் கடமையாற்றியபோது குருவாக அருட்பொழிவு பண்ணப்பட்டார்.

இவர் நெடுந்தீவு (1975 – 1979), அராலி (1979 – 1980), தமிழ்நாடு இறையியல் கல்லூரி – மேற்படிப்பு (1980 –1982) அளவெட்டி (1982 – 1986), உடுப்பிட்டி (1986–1989) நவாலி (1989 – 1995), வவுனியா (1995 – 1999), கிறிஸ்தவ இறையியல் கல்லூரி விரிவுரையாளர் (1999 – 2003), உடுப்பிட்டி (2003 – 2008) ஆகிய இடங்களில் இறைபணியாற்றி 2008 இல் இளைப்பாற்றினார். ஆனாலும் தொடர்ந்து இறைவனுக்குத் தொண்டு செய்யும் ஆர்வம் கொண்ட இவர், மன்னார் பகுதியிலே அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையை ஆரம்பித்து முதன் முதல் மன்னார் நகரப்பகுதியில் இறைபணியினை ஆரம்பித்த அமெரிக்கன் சிலோன் மிசனின் குருவாக வரலாற்றில் இடம்பிடித்துக்கொண்டுள்ளார்.

மன்னர் பிரதேசத்தில் குறுகிய காலம் இறைபணியை மேற்கொண்டு உறவுகளை மேம்படுத்திய இவர் மறுபடியும் தான் திருமண பந்தத்தில் இணைந்த ஊரான ஏழாலை வடக்குக்குத் திரும்பினார். அவருடைய இளைப்பாற்றுக் காலத்திலும் அதற்கு முன்பாகவும் இவர் நூல்கள் சிலவற்றை எழுதினார். அத்துடன் எப்பொழுதும் இவர் நீதிக்காகவும்



உண்மைக்காகவும் துணிந்து பேசுகிற ஒருவராகவும் நீதிக்காக பல நிலைகளில் எழுத்து மூலமாக விழிப்புணர்வுகளைக் கொண்டு வரும் ஒருவராகவும் விளங்கினார்.

குறுகிய காலம் சுகயீனங்களோடு வாழ்ந்த இவர் 10–07–2025 வியாழன் அன்று கர்த்தருக்குள் நித்திரையடைந்தார். இவருடைய நல்லடக்க வழிபாடு 12–07–2025 சனிக்கிழமை அன்று ஏழாலை வடக்கு தேவாலயத்தில் சபைக்குரு அருட்பணி. ஏ. பி. தேவதாஸ் அவருடைய தலைமையில் நடைபெற்றது. இவ்வழிபாட்டில் அருட்பணி. டி. எஸ். மதியாபரணம், அருட்பணி. பி. தேவ மித்ரன் அருட்பணி. டி. எச். வசந்தகுமார், அருட்பணி. ஜே. ஞானபொன்ராஜா, அருட்பணி. ஏ. கமலகுமாரன், அருட்பணி. வசந்த் ஆனந்த், அருட்பணி. அன்ரணி செபஸ்டியன், ஜேரோம் அண்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர். இரங்கல் உரையை திரு. லிவின்டன் தேவராஜா அவர்களும் அருட்பணி. டானியல் ஜேயரூபன் அவர்களும் வழங்கினர். இறைச் செய்தியினை அருட்பணி. ஜி. டி. மைனசீலன் அவர்கள் “எளிமையான, முன்மாதிரியான வாழ்க்கையுடனும் துணிச்சனுடனும் வாழ்ந்த இவரை, ஆண்டவர் இயேசுவுக்காக துன்பங்களை மகிழ்ச்சியுடன் தெரிந்து கொண்டு வாழ்ந்தார்” என்று கூறினார். அருட்பணி. எம். டீ. போல்சுரேஸ் அவர்களுடைய இறையாசியுடன் வழிபாடு நிறைவுற்றது. திருச்சபைகளை சேர்ந்த மக்கள், விசுவாசிகள், நண்பர்கள், உறவினர்கள் என ஏராளமானோர் நல்லடக்க வழிபாட்டில் கலந்து தங்களது அஞ்சலியைச் செலுத்தினர். இறுதியில் புகழுடல் ஏழாலை வடக்கு அமெரிக்கன் மிசன் திருச்சபை கல்லறை தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# மானிப்பாய் திருச்சபையின் புதிய மிசன் இல்லம்

மானிப்பாயில் அமைந்துள்ள அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையானது 205 வருட நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு திருச்சபை ஆகும். இங்கு அமைந்துள்ள ஆலயம் 1621ஆம் ஆண்டு காலப்பகுதியில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்டது. பின்னர் அழிவுற்ற இவ்வாலயம் 1679ஆம் ஆண்டு Laurens Pil என்னும் ஒல்லாந்த தளபதியால் கட்டப்பட்டது. இவர்களுடைய குருமார்கள் தங்கியிருந்து பணியாற்றுவதற்காக இந்த ஆலயத்துடன் அவர்கள் குருமனையையும் கட்டினார்கள். நீண்ட வரலாற்றினை கொண்ட இந்தக் குருமனை (மிசன் இல்லம்) 2023ஆம் ஆண்டு முற்றாக சேதமடைந்தது. நிர்வாக சபையின் வேண்டுகோளுக்கு அமைவாக அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் (CACM) நிர்வாகம் புதிய மிசன் இல்லம் ஒன்றை அமைக்கும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டது.

அதன்வழி பழைய மிசன் இல்லத்துக்குப் பிற்புறத்தில் 04.04.2025இல் புதிய மிசன் இல்லத்துக்கான அடிக்கல் CACMஇன் அலுவலர்களால் நாட்டப்பட்டு, வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. நான்கு மாத காலத்துக்குள்



கட்டப்பட்ட இந்த மிசன் இல்லமானது, 13.08.2025 காலை 10.00 மணிக்கு உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. இம் மிசன் இல்லத்தினை மானிப்பாய் திருச்சபை அங்கத்தவர்களான மருத்துவக் கலாநிதி ஹென்றி இராஜரட்ணம் மற்றும் அவரது துணைவியார் வசந்தி இராஜரட்ணம் அவர்கள் தாங்களாவே முன்வந்து கட்டி முடித்துத் திருச்சபை நிர்வாகத்திடம் கையளித்தனர்.

இந்நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொண்ட மருத்துவக் கலாநிதி. ஹென்றி இராஜரட்ணம் தம்பதியினர்களும் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட அவருடைய பிள்ளைகளும் அவர் தம் குடும்ப உறவுகளும் தமிழ் கலாசார இசைகளுடன் "கிறீன் விலா" இல்லத்திலிருந்து அழைத்து வரப்பட்டனர். (05ஆம் பக்கம் பார்க்க)

## போட்டி இல. 004 கான விடைகள்

1. திருவிவிலியம் 2. ஏசாயா
3. அப்போஸ்தலர் 4. 70
5. இறையாட்சி உங்களுக்கு உரியதே 6. இறையரசு
7. நீர் கடவுளின் மெசியா 8. மரியாள்
9. 12 10. சகேயு
11. நீங்கள் சோதனைக்குட்படாதபடி செபம் பண்ணுங்கள்.
12. பேதுரு

### பங்குபற்றியவர்கள்

செல்வி சத்தியரூபன் அஸ்ரிகா
செல்வன். ர. கஜீகரன்
செல்வி. சத்தியரூபன் சஸ்மிதா
செல்வி. அ. ஆக்ஷயா
செல்வன். யூ. அபிசாய்
செல்வன். யூ. ஜக்சன்
செல்வி. ஆகாசியா நரேஸ்நிக்ஸன்
செல்வி. ஜசில்டா யேசுராசா
செல்வி. யூ. லிதிஷா
செல்வி. ஏ. ஜன்சா
மனோச் திவாகர்






குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்
செல்வி. ஏ. ஜன்சா

# வினாடிக்கு வினா

## போட்டி இல. 005

01) இயேசு ஓய்வுநாளில் செய்த புதுமை?
1.தண்ணீரை இரசமாக்கினார் 2. சிறுவரை உயிர்ப்பித்தார்
3. நீர்க்கோவையுள்ள மனிதனைக் குணமாக்கினார்
4. குருடனுக்குப் பாவையளித்தார்

02) உயிர்த்தெழுதல் பற்றிய நம்பிக்கையற்றவர்கள்?
1. பரிசேயர் 2 சதுசேயர் 3. லேவியர் 4. சமாரியர்

03) இறையரசு என்பது?
1. ஒருவரின் மரணத்தின் பின்னர் அடைவது
2. கிறிஸ்தவர்கள் மட்டும் அடைந்துகொள்ளும் இடம்
3. பலஸ்தீனாவில் பரந்து காணப்பட்ட ஆட்சிமுறை
4. முழு உலகிலும் நிலவும் இறைவனின் ஆதிக்கம்

04) இயேசு செய்த உயிர்ப்பிக்கும் புதுமைகள்?
A. யவீருவின் மகள் B. சீமோன் பேதுறுவின் மாமி
C. நாயீன் பட்டணத்து விதவையின் மகன்
D. நூற்றுவத் தலைவனின் பணியாளன்
1. Aயும் Cயும் 2. Aயும் Bயும் 3. Bயும் Dயும் 4. Bயும் Cயும்

05) தம்மை "இறைவனின் பிள்ளைகள்" என்று அழைத்துக் கொண்டவர்கள்?
1. சமாரியார் 2. பரிசேயர் 3. இஸ்ரயேலர் 4. சதுசேயர்

06) இறையரசின் உவமைகள்?
1. புளித்த மா 2. கடுகு விதை
3. விதைப்பவன் 4. மேற்கூறிய அனைத்தும்.

07) "ஆகாயத்துப் பறவை" என்னும் பதம் பயன்படுத்தப்பட்டுள்ள இரு உவமைகள்?
A. கடுகுவிதையின் உவமை B. காணாமற்போன மகன்.
C. விதைப்பவன் உவமை D. புளித்தமாவின் விதை
1. Aயும் Bயும் 2. Aயும் Dயும் 3. Aயும் Cயும் 4. Bயும் Cயும்

08) இறையரசின் பணிக்குத் தம்மை அர்ப்பணித்தவர்களிடம் இருக்கக்கூடாத பண்பு?
1. தொண்டு செய்தல் 2. பிறருக்காகத் தன்னை ஈதல்
3. சந்தர்ப்பத்திற்கேற்ப செயற்படுதல்
4. சுகபோக வாழ்க்கை வாழ்தல்

09) தாழ்ச்சியோடு செபிக்கவேண்டும் என்பதற்காக இயேசு கூறிய உவமை?
1.தாலந்து உவமை 2.நேர்மையற்ற பணியாளர் உவமை
3. பரிசேயனும், ஆயக்காரனும் உவமை 4.நல்லசமாரியன் உவமை

10) பத்து தொழுநோயாளர்களுள் இயேசுவுக்கு நன்றி கூற வந்தவர்?
1. சமாரியர் 2.யூதர் 3.பரிசேயர் 4.சதுசேயர்.

11) " பிறரைத் தவறிழைக்கத் தூண்டுவது பெரிய குற்றம்" இதற்கு இயேசு கூறிய தண்டனை?
1. கண்டிப்பது. 2. தீயில் தள்ளுவது.
3) கழுத்தில் எந்திரக்கல் கட்டப்பட்டு சமுத்திரத்தில் தள்ளுவது.
4. சிறையில் அடைப்பது.

12) யூதர்களின் பிரதானமான பரிசுத்த நகரம்?
1. சமாரியா 2. பெத்லகேம் 3. கலிலேயா 4. எருசலேம்

மேற்காணும் போட்டிக்கான பதில்களை ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுதி அனுப்புங்கள். சரியான பதிலை அனுப்பி வைக்கும் போட்டியாளர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும். மற்றய வெற்றியாளர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சரியான பதில்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

மேலும் ஒரே பிரதி மீண்டும் மீண்டும் வேறு நபர்கள் அனுப்பும் பட்சத்தில் முதல் அனுப்புவரின் பதில் மட்டுமே போட்டியில் இணைத்துகொள்ளப்படுவதுடன் மற்றவர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்கள்.

# குறுக்கெழுத்துப் போட்டி
## போட்டி இல 005

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | | 02 | 03 | 04 | |
| | ■ | 05 | | | ■ |
| 06 | | | | | |
| ல் | ■ | பா | ■ | | ■ |
| 07 | | | | | 08 |
| | ■ | | ■ | ■ | |

### இடமிருந்து வலம்

01. பவுல் அடிகளாரின் நிருபங்களில் [கடிதங்களில்] ஒன்று
05. கவர் கொம்பு
06. கலை வடிவங்களில் ஒன்று
07. நூல்களில் பின் இணைப்பு

### மேலிருந்து கீழ்

01. வேதத்தில் உள்ள ஏழு சபைகளுள் ஒன்று
02. சென்னையின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்று. சர்வதேச துடுப்பாட்ட மைதானம் இங்கு அமைந்துள்ளது. [குழம்பியுள்ளது]
03. கரங்களை இவ்வாறு செய்து வணக்கம் சொல்வர். [திரும்பியுள்ளது]
04. ஓங்கிய ...... கொண்டு இறைவன் விடுவித்தார். [குழம்பியுள்ளது]
08. சிறையில் இருப்பவர்.

மேற்காணும் போட்டிக்கான பதில்களை ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுதி அனுப்புங்கள். சரியான பதிலை அனுப்பி வைக்கும் போட்டியாளர்களில் ஒருவர் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசில் வழங்கப்படும். மற்றய வெற்றியாளர்களின் பெயர்கள் பிரசுரிக்கப்படும். சரியான பதில்கள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும்.

மேலும் ஒரே பிரதி மீண்டும் மீண்டும் வேறு நபர்கள் அனுப்பும் பட்சத்தில் முதல் அனுப்புவரின் பதில் மட்டுமே போட்டியில் இணைத்துகொள்ளப்படுவதுடன் மற்றவர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவர்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி**

உதயதாரகை
ஆசியா இல்லம், மருதனார்மடம், சுன்னாகம்

**மின்னஞ்சல் முகவரி**
themorningstar1841@gmail.com

**Whatsapp**
0773 627 537


**இறுதித் திகதி 21-11-2025**

## போட்டி இல 004க்கான சரியான பதில்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| 01 ப | ர | 02 லோ | 03 க | ம் |
| ம் | ■ | கா | த் | ■ |
| 04 ப | த் | தி | ரி | 05 கை |
| ர | ■ | ப | த | மா |
| 06 ம் | ன | தி | ■ | று |

### பங்குபற்றியவர்கள்

செல்வி சத்தியரூபன் அஸ்ரிகா
செல்வி. சத்தியரூபன் சஸ்மிதா
செல்வன். ரஜீகரன் கஜீகரன்
செல்வி. அ. ஆக்ஷயா
செல்வி. ஏ. ஜென்ஷா
மனோச் திவாகர்
செல்வி. ஜசில்டா யேசுராசா
செல்வி. ஆகாசியா நரேஸ்நிக்ஸன்
செல்வி. ஜே. லிதிஷா
செல்வன். ஜே. அபிசாய்
செல்லன். ஜே. ஜக்சன்
திருமதி. ரூத் ரோய்






**குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டவர்**
செல்வி. சத்தியரூபன் சஸ்மிதா




## CCA மாநாடு....

(01ஆம் பக்க தொடர்ச்சி)

வழிகாட்டுதல் என்ற தலைப்புக்களில் செயலர்வு நடைபெற்றது. CCA இணைப்பாளர் ஜோன் போல் தேவக்குமார் அவர்களின் தலைமையிலும் பொதுச்செயலாளர் CCA அருட்பணி. மத்தியூஸ் அவர்களின் ஆலோசனையிலும் கொழும்பு அமைப்புக்கான பொறுப்பாளர் அருட்பணி. எபினேசர் ஜோசப் அவர்களின் வழிகாட்டலிலும் முன்னெடுக்கப்பட்டது.

அருட்பணி. அன்றூ, அருட்பணி. அருள்நாதன், அருட்பணி. எபினேசர், அருட்பணி. மெல்றோய் ஆகியோர் விரிவுரையாளராக இணைந்து கொண்ட இச்செயலமர்வில் பங்களாதேஷ், இந்தியா மற்றும் இலங்கை (மருதானர்மடம் - யாழ்ப்பாணம், பிரிமத்தலாவ - கண்டி, கொழும்பு போன்ற இடங்களிலுள்ள இறையியல் கல்லூரிகளின் மாணவர்கள் கலந்து கொண்டு பல அனுபவ பயன்களையும் பெற்றுக் கொண்டனர். இவ்வமைப்பு தாய்லாந்தைத் தலைமையாக கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

## மானிப்பாய் திருச்சபையின்...

(03ஆம் பக்க தொடர்ச்சி)

வழிபாட்டினை அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் அவர்கள் தலைமை தாங்கி நடாத்த CACMமின் பொருளாளர் பெயர்பலகையைத் திரை



நீக்கம் செய்து வைத்தார். CACMமின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்கள் இவ்வில்லத்தினைப் பிரதிஸ்டை செய்து இறைசெய்தியைப் பகிர்ந்து கொள்ள, கொடையாளிகளான மருத்துவக் கலாநிதி. ஹென்றி இராஜரட்ணம் தம்பதியினர் நாடாவினை வெட்டி, மிசன் இல்லத்தினை திறந்து வைத்ததுடன் திருச்சபையின் நிர்வாகத்திடம் இல்லத்தின் திறப்பினைக் கையளித்தினர். திருச்சபை நிர்வாகம் அருட்பணியாளர் குடும்பத்தை உள்ளே அழைத்து வந்து வீட்டினை அவர்களிடம் கையளித்தனர்.



வழிபாட்டினை CACM தலைவருடன் சபைக்குரு, CACMஇன் செயலாளர் அருட்பணி. ஏ. பி. தேவதாஸ், CACMஇன் உபதலைவர் திரு. ஐ. அருள்றொகான், யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல் சுரேஸ், CACMஇன் முன்னாள் தலைவர் அருட்பணி. ரி. தேவநேசன், காரைநகர் திருச்சபை அருட்பணியாளர் சுதாசினி சுதாகரன், அருட்பணி. ஜெரோம் அண்ணன் ஆகியோர் இணைந்து நடத்தினர். பொதுக்கூட்டத்தில் சபைக்குரு, CACM தலைவர், CACM பொருளாளர், சபை சார்பில் மீரா ஜெயச்சந்திரன் ஆகியோர் சிறப்புரைகளை ஆற்ற விருந்தினர்கள் சார்பில் பதிலுரை வழங்கப்பட்டது. மானிப்பாய் திருச்சபையின் செயலாளர் திரு. ஜே. விக்டர் ஜெகநாதன் நன்றியுரையினைப் பகிர்ந்து கொண்டார்.



இந்நிகழ்வு வரலாற்றில் முக்கிய இடம் பெறுகின்றது. மருத்துவக் கலாநிதி. ஹென்றி இராஜரட்ணம் மற்றும் திருமதி. வசந்தி இராஜரட்ணம் இருவரும் CACM திருச்சபையின் உபதலைவர்களாக இருந்து சிறப்பாகப் பணியாற்றியவர்கள். மறவன்குளம் திருச்சபையின் மிசன் இல்லம், கிளிநொச்சி திருச்சபையின் மிசன் இல்லம், கிளிநொச்சி திருச்சபையின் காணி, குருமனை, மானிப்பாய் மிசன் இல்லம் ஆகியவற்றைப் புதிதாக கட்டிக் கொடுத்தவர்கள். திருச்சபையின் பல பணிகளை கிழக்கிலும் வன்னியிலும் செய்தவர்கள். இவர்களையும் பிள்ளைகளையும் கௌரவித்துத் திரு. திருமதி. யெசுநாதன், திருமதி. புஸ்பவதி மகேந்திரராஜா, திரு. திருமதி. ஸ்க்மன் நிஷானி, திரு. திருமதி. டினேஸ் ஜெயராணி ஆகியோர் மாலைகளை அணிவித்தும் பொன்னாடை அணிவித்தும் கொடையாளிகளைக் கௌரவித்தனர்.

# அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபை

# பெரியநீலாவணை

## புனித அந்திரேயா ஆலயம்

பெரிய நீலாவணை என்னும் அழகிய ஊரிலே சுமார் 30 வருடங்களுக்கு முன்பு பேராயர் D. R. அம்பலவாணர் அவர்களினால் கிழக்கின் பகுதிகளுக்கு திருச்சபை பணிகளை விஸ்தரிப்பதற்காக அருட்பணி. E. P. சொலமனஸ் போதகர் நியமிக்கப்பட்டு, பணிகள் சிறப்பாக நடைபெற்று வந்தன. மட்டக்களப்பிலே அதிகளவான பணிகள் நடைபெறுவதை அவதானித்த பேராயர் D. R. அம்பலவாணர் அம்பாறை பகுதியிலும் திருச்சபை பணிகளை விஸ்தரிக்க சொல்லி அருட்பணி. E. P. சொலமன்ஸ் அவர்களுக்கு ஆலோசனை வழங்கினார். இதன் பயனாக அருட்பணி. E. P. சொலமன்ஸ் அவர்கள் பெரிய நீலாவணையை ஆரம்ப புள்ளியாக கருதி திருச்சபைப் பணிகளை ஆரம்பித்தார். இதன் முதற்கட்டமாக பெரியநீலாவணை – விஸ்ணு வித்தியாலய வீதியில் கடற்கரை அருகாமையில் உள்ள காணி கொள்வனவு செய்யப்பட்டு அங்கே நெசவு நிலையமும், பாலர் பாடசாலை பகல் பராமரிப்பு நிலையமும், மாலை நேர வகுப்புக்களும் நடைபெற்று திருச்சபை பணிகள் மெல்ல மெல்ல துளிர் விட ஆரம்பித்தது. இப்படியாக பணிகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது. போதுமான நிதிவளம் இல்லாத காரணத்தினால் நெசவு நிலைய பணிகளும் மாலை நேர வகுப்புக்களும் இடைநிறுத்தப்பட்டபோதும் பாலர் பாடசாலை மற்றும் பகல் பராமரிப்பு நிலையம் என்பன தொடர்ந்து நடைபெற்று வந்தன.

இந்த காலத்திலே அருட்பணி. E. P. சொலமன்ஸ் அவர்கள் இடமாற்றம் பெற்று செல்ல கிழக்கின் குரு முதல்வராக அருட்கலாநிதி. S. ஜெயநேசன் அவர்கள் பணிகளை பொறுப்படுத்துக் கொண்டார். இதன் விளைவாக 2000ம் ஆண்டு பெரிய நீலாவணை பணிகளும் வளர்ச்சியைகாண ஆரம்பித்தன. பாலர் பாடசாலை மற்றும் பகல் பராமரிப்பு நிலைய பணிகளுடன் போரினால் பாதிக்கப்பட்டுப் படிக்க வசதியில்லாத பெண் பிள்ளைகளுக்கு என்று பெண்கள் இல்லம் தொடங்கப்பட்டது. இவ்வாண்டிலே திருச்சபை பணிகளும் தொடங்கப்பட்டன இப்பெண் பிள்ளைகளும் அருகில் உள்ள மக்களும் கூடி ஆண்டவரை வழிபடவென புனித அந்திரேயாவின் பெயரில் திருச்சபை தொடங்கப்பட்டது. இத்திருச்சபையானது பாலர் பாடசாலை கட்டித்திலே நடத்தப்பட்டது. இச்சந்தர்ப்பத்திலே பல குடும்பங்கள் திருச்சபையிலே இணைந்து கொண்டார்கள். இதில் குறிப்பாக பல விசுவாசிகள் பெரியகல்லாறு கிராமத்திலே இருந்து திருச்சபையில் இணைந்து கொண்டமை திருச்சபை



வளர்ச்சிலே ஒரு ஊன்று கோலாக அமைந்தது. திங்களில் இருந்து வெள்ளி மட்டும் பாலர் பாடசாலை அதற்கு பிற்பாடு ஞாயிற்றுக்கிழமை பாலர் பாடசாலை மேசைகளை கதிரைகளாக மாற்றி ஆலய வழிபாட்டுக்கு உரிய வகையில் கட்டிடத்தை அலங்கரித்து வழிபாடுகளை நடத்துவது எமக்கு தர்மசங்கடமான சூழ்நிலையிலும் தான் ஆண்டவரை நாங்கள் தேடினோம் ஆராதித்தோம்.

இவ்வாறன நிலமையில்தான் ஒரு ஆலயம் வேண்டும் என்பது இன்றி அமையாததொன்றாகவும் மற்றும் கவலையான விடயமாகவும் எமக்கு மாறியது.



பல நேரங்களில் அனேகரால் தனித்துவிடப்பட்டவர்களாக ஜெபத்திலே எங்கள் ஆதங்களை ஆண்டவரிடம் கொட்டித்தீர்தோம். ஜெபத்தை கேட்பரே மாம்சமானவர் யாவரும் உம்மிடத்தில் வருவார்கள் என்ற ஆண்டவரின் வார்த்தைக்கிணங்க எங்கள் ஜெபத்திற்கான ஆண்டவரின் பதில்களுக்கு நீண்ட நாட்கள் நீடிக்கவில்லை. சீக்கிரமே எமது திருச்சபைக்கான காணி ஹெர்மன், பிறன் லோரன்ஸ் ஆகியோரின் நிதி உதவியுடன் கொள்வனவு செய்யப்பட்டு திருச்சபை கட்டுமானம் சீக்கரமே தொடங்கப்பட்டது. திருச்சபை கட்டுமானத்திலே திருச்சபை விசுவாசிகள் உற்சாகமாய் ஈடுபட்டார்கள். 2004ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11ம் திகதி ஆலயம் ஆராதனைக்காக திறக்கப்பட்டது. இதற்காக அரும்பாடுபட்டு உழைத்த சக விசுவாசிகளான கர்த்தருக்குள் நித்திரையடைந்த எஸ். எல். ஜெயகருணா, திரு. வி. யோகராசா மற்றும் 2004ம் ஆண்டு சுனாமி பேராலையால் கர்த்தருக்குள் நித்திரையடைந்த திருமதி. ஜெயதர்சினி செல்வந்தா போதகர் அம்மா மற்றும் மகன் ஆகாஸ் ஆகியோரை நினைவுகூராமல் திருச்சபை வரலாற்றை எழுதவும் முடியாது. அதே நேரத்தில் திரு. வி. சுகுமாரன் அங்கிளின் பங்களிப்பு அபரிவிதமானது. இன்றும் திருச்சபைக்காக அவர் செய்து வருகின்ற பணிகளை விபரிக்கமுடியாது.

இன்று 21ஆம் ஆண்டுகளாக நீதிக்காக சமத்துவத்திற்காக சக வாழ்விற்காக ஒடுக்கப்படுகின்ற மக்களுக்காக குரல் கொடுத்து அநீதியின் பக்கம் சாய்ந்து கொள்ளாமல் நீதியின் பக்கம் நிலைநின்று *நீங்கள் உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள் மலையின்மேல் இருக்கிற பட்டணம் மறைந்திருக்கமாட்டாது.* என்ற ஆண்டவரின் வார்த்தைக்கிணங்க கிறிஸ்துவை அறிந்தவர்களுக்கும் கிறிஸ்துவை அறியாதவர்களுக்கும் இன்றும் அணையாமல் ஒளிகொடுத்துக்கொண்டு கிறிஸ்து இயேசுவுக்கு சாட்சியாக இவ்வாலயம் திகழ்கின்றது.

இங்கு பணி செய்த அருட்பணியாளர்கள் விபரம்:

| | |
|---|---|
| BRO. K. J. W. THEVASAKAYAM | 2000 - 2004 |
| BRO. S. SELVANTHA | 2004 - 2005 |
| BRO. S. DANIEL MOHAN | 2005 - 2006 |
| REV. AZARIAH SOUN DARARAJ | 2006 - 2010 |
| REV. RAJAN ROHAAN | 2010 - 2014 |
| REV. A. KAMALAKUMARAN | 2014 - 2015 |
| REV. J. ANTONY SUTHAGAR | 2015 - 2018 |
| REV. G. JEYAKUMAR | 2018 - 2022 |
| SIS. S. BIYOORA | 2022 - 2022 |
| REV. S. PUVIYARASAN | 2022 - |

கிறிஸ்துவின் பணியில்
திரு. மாறாவர்மன்
புனித அந்திரேயா ஆலயம் – பெரிய நீலாவணை

## நல்ல விதைகளை நாட்டுவோம்

ஆக்கம் : ஸ்ரீபன் அருளம்பலம்

இலங்கை தேசம் ஓர் விவசாய பொருளாதாரத்தை பின்பற்றுகிறது. எமக்கு பெருமளவு வருமானத்தை பெரும் தோட்ட பயிர்கள் மூலம் பெற்று வருகிறோம். இத்தகைய பின்னணியில் ஆண்டவர் இயேசு கடவுளின் அரசு பற்றி உவமைகள் மூலம் பாமர மக்களோடு பேசினார். இவற்றில் "கோதுமையும் களையும்"என்னும் உவமை முக்கியம் பெறுகிறது. இதனை மத்தேயு 13: 24- 30 வரை உள்ள பகுதியில் நாம் காணலாம்.

ஓர் விவசாயி தனது தோட்டத்தில் விரும்பிப் பயிரிடாத அனைத்து பயிர்களையும் நாம் களைகள் என அழைக்கின்றோம். களைகள் பொதுவாக பயிரின் வளர்ச்சியைப் பாதிக்கின்றது. பயிருக்கு கிடைக்க வேண்டிய சூரிய ஒளி, நீர், காற்று, கனியுப்புக்கள் போன்றவைகள் களைகளுக்கும் கிடைப்பதனால் களைகள் பயிரின் வளர்ச்சியைப் பாதிக்கின்றது. இதே போன்றே இயேசு கூறிய உவமையில் கோதுமைக்குள் இனம் தெரியாதோர் களைகளை நட்டனர். இங்கு களைகள் கோதுமையின் வளர்ச்சியை பாதிக்கச் செய்தது.

நல்லவர்களுடைய வாழ்க்கையிலும் தீயவர்களுடைய தாக்கம் எப்போதும் இருந்து கொண்டே இருக்கும். நாயில் காணப்படும் தெள்ளு நாயின் இரத்தத்தை குடித்து உறிஞ்சி இறுதியில் நாய் இறந்து விடுகிறது. மாமரத்தில் காணப்படும் குருவிச்சை மா மரத்தின் சாற்றினை குறிஞ்சி அதனை படச் செய்கிறது. இதே போன்றே தீமைகள் அல்லது தீயவர்கள் நல்லவர்களின் வளர்ச்சியை கெடுக்கின்றனர். கோதுமையையும் களையையும் வேறு பிரிப்பது கடினமாகின்றது. அதனைப் போன்றே நல்லவர் யார்? கெட்டவர் யார்? என வேறுபடுத்துவதும் கடினமாகும். காக்கையின் கூட்டில் குயில் முட்டை இட்டு குஞ்சு பொரிக்கின்றது. எது காகம்? எது குயில்? என்பது அது கத்தும் போது தான் வேறுபடுத்த முடியும். இதேபோன்று நல்லவர் யார்? கெட்டவர் யார்? என்பது அவர்களின் செயற்பாட்டின் மூலமே நாம் அறியலாம்.



நாம் கோதுமைகளை அல்லது நல் விதைகளை நட அழைக்கப்பட்டுள்ளோம். மாறாக களைகளை அல்ல. நாம் எதை விதைக்கின்றோமோ அதை அறுவடை செய்ய நேரிடும். "ஒசியா" இறைவாக்கினர் இஸ்ரவேலரை நோக்கி **"நீங்கள் காற்றை விதைத்து சூரை காற்றை அறுக்காமல் இருங்கள்"** எனக் கூறுகின்றார்.

திருச்சபை வரலாற்றில் சுயநலம் மிகுந்த காலப்பகுதியில் "புனித பிரான்சிஸ்" அடிகளார் பொதுநலத்தை விதைத்தார். இதற்காக தன்னுடைய சொத்துக்கள் எல்லாவற்றையும் விற்று ஏழைகளுக்குக் கொடுத்தார். மேலும் "அன்னை தெரேசா" சமூக சேவை எனும் விதையை விதைத்து இயேசுவை சாதாரண மக்களில் கண்டார்.

"புனித அகுஸ்தீனார்" வன்முறை சூழலில் நீதியை விதைத்தார். மார்ட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டேலா போன்றவர்கள் ஒடுக்குமுறை சூழலில் விடுதலையை விதைத்தனர். இதன் ஒளியில் இன்று நாங்கள் எதை விதைக்கின்றோம் என எண்ணிப் பார்க்க அழைக்கப்படுகின்றோம். இறுதித் தீர்ப்பு நாளில் எங்கள் செயல்களுக்கு அமைய நீதித் தீர்ப்பு வழங்கப்படும். எனவே களைகளை அல்ல கோதுமையே கடவுள் விரும்புகிறார்.

## முன்பள்ளி

### விளையாட்டு விழாக்கள்

சேவைத் திருப்பணி மன்றத்தின் இயக்குநர் திரு. பிரிவீன் ஜோசெப் அவர்களும் இணைப்பாளர் திரு. தம்பிராஜா யூதராஜா அவர்களும் 2025 ஆகஸ்ட் மாதத்தில் கிழக்குப் பிராந்தியத்தின் பணிகளை பார்வையிட்டதுடன், பல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டனர்.

அந்த வகையில் 06.08.2025 அன்று கரடியனாறு, கித்துள், கோப்பாவெளி முன்பள்ளிகள் இணைந்து கரடியானாறு முன்பள்ளியில் நடைபெற்ற ஒருங்கிணைந்த விளையாட்டு விழாவில் விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். இந்நிகழ்வுகள் குறித்த முன்பள்ளிகளின் முகாமையாளர் அருட்பணி. எஸ். செல்வகுமார் தலைமையில் நடைபெற்றது. இதில் விருந்தினர்கள், முன்பள்ளிகளின் ஆசிரியர்கள், பெற்றோர்கள்,



பிள்ளைகள், கிராம மக்கள், நலன்விரும்பிகளென அனேகர் கலந்து கொண்டனர்.

சிறப்பாக மூன்று முன்பள்ளிகளும் நெய்தல், முல்லை, குறிஞ்சி என பெயரிடப்பட்டு தனித்தனியே கண்ணைக் கவரும் வண்ண மயமான இல்லங்கள் அமைத்து அலங்காரங்கள் செய்து காட்சியளித்தது மட்டுமல்லாமல் வீர வீராங்கணைகளும் இல்ல வர்ணத்தில் ஆடை அணிந்து விளையாட்டு நிகழ்வுகளில் பங்கேற்றது ஒரு எழுச்சியையும் கவர்ச்சியையும் மன மகிழ்ச்சியையும் புத்துணச்சியையும் ஏற்படுத்தியிருந்தது.

அனைத்து நிகழ்வுகளும் குழு நிகழ்வாகவே நடைபெற்றன. இதன் மூலம் பிள்ளைகள் சந்தோசித்து மகிழ்ந்திருந்தனர். விசேடமாக இல்லங்களுக்கிடையில் நடைபெற்ற கயிறுழுத்தல் நிகழ்வானது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. வேடம் பூணுதல் (வினோத உடை) நிகழ்வில் அனேக பிள்ளைகள் பங்கேற்று பலவிதமான வேடங்கள் தரித்திருந்தனர் அதுமட்டுமல்லாது பெற்றோர் நிகழ்வில் மூன்று முன்பள்ளிகளிகளின் பெற்றோர்களும் ஏறத்தாழ 90 பேர் வரையில் பங்கேற்றது சிறப்பாக அமைந்தது. விருந்தினர்களின் சிறப்புரையை தொடர்ந்து அனைத்து பிள்ளைகளுக்குமான பரிசில் வழங்கும் நிகழ்வும் சிறப்பாக நடைபெற்றது.

மேலும் 07.08.2025 அன்று இராலோடை நீதிச்சோலை முன்பள்ளி பிள்ளைகளின் விளையாட்டு விழா நடைபெற்றது. இந்நிகழ்விலும் மேற்படி அதிதிகளே விருந்தினர்களாக கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர், இந்நிகழ்வு குறித்த முன்பள்ளியின் முகாமையாளர் - கிழக்குப்பிராந்திய

(12ஆம் பக்கம் பார்க்க)

## Prayers for the Plain Man - William Barclay

## FIFTH DAY

### In the Morning

O God, all through to-day make me quicker to praise than to criticize.

Help me never to forget to thank people for anything that they do for me.

Make me always ready to speak a word of praise and of appreciation.



Grant that I may take no service for granted, and that I may allow no help to pass unnoticed.

Make me quick to notice when people are upset or depressed, and give me the ability to speak the word which will help and cheer them.

All through to-day help me to think far less of myself and far more of others, and so to find my own happiness in making others happy.

This I ask for Jesus' sake. Amen."

### In the Evening

O God, our Father, as we look back across this day, we ask You to Forgive us if today we have made things harder for others.

Forgive us if we have made work harder for others, by being careless, thoughtless, selfish and inconsiderate.

Forgive us if we have made faith harder for others, by laughing at things they hold precious, or casting doubts on things they hold dear.

Forgive us if we have made goodness harder for others, by setting them an example which would make it easier for them to go wrong.

Forgive us if we have made joy harder for others, by bringing gloom and depression through our grumbling discontent specially at home.

Forgive us, O God, for all the ugliness of our lives; and tomorrow help us to walk more nearly as our Master Jesus walked, that something of His grace and beauty may be on us. This we ask for Your love's sake. Amen."

# பிராந்திய நிகழ்வுகள்

## கொழும்பு முதுவாலிபர் சங்கதினரின் மலையக விஜயம்

அமெரிக்கன் சிலோன் மிசன் கொழும்பு திருச்சபையின் முதுவாலிபர் மன்ற பிரதிநிதிகள் யூலை 26 மற்றும் 27ம் திகதிகளில் மலையக பகுதிகளில் நடைபெறும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபைப் பணிகளை பார்வையிடவும் பணிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான விடயங்களைப் பற்றி அறிந்து கொள்வதற்கும் ஏற்ற வகையில் களவிஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.



பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. பிறேமன் ராஜன் றோகான், பிராந்தியப் பொருளாளர் திரு. றொசான் ஜோசேப் இவர்களுடன் திரு. சொலமன் ஜெயரூபன் மற்றும் திருமதி. நிசாந்தி ஜெயரூபன் ஆகியோரும் சென்றிருந்தனர்.

இவர்கள் உடப்புசலாவையில் உள்ள எமஸ்ட் புனித அந்திரேயா ஆலயத்தின் அருட்பணியாளர் அருட்பணி. கங்கா பிரசாத், அருட்பணி. ஜோ. ஜெயசீலன், சபையின் நிர்வாக குழு உறுப்பினர்கள் ஆகியோருடன் முன்னெடுக்கப்பட கலந்துரையாடலில் பொதுமண்டபம் மற்றும் ஆலயம் பெருப்பித்தல் போன்ற ஆக்கபூர்வமாக விடயங்கள் குறித்து நீண்டநேர கூட்டம் நடத்தப்பட்டதுடன் ஆலய நிர்வாக சபையினால் சிபாரிசு செய்யப்பட்ட இரு கட்டிடவேலை செய்யும் ஒப்பந்தகாரர்களுடனும் கலந்தாலோசனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

## கொழும்பு மற்றும் மலையக பெண்களுக்கான செயல்நெறி

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் கொழும்பு மற்றும் மலையக பெண்கள் பணி மன்றானது தெகிவளை சீ.ஏ.சீ.எம் ஆலயத்தில் இருநாள் ஆன்மீக புத்துருவாக்க செயல்நெறியினை சிறப்புற நடந்தேற்றியிருந்தது. இச்செயல்நெறியானது பெண்களுக்குள்ளான ஆவிக்குரிய புதுப்பித்தல், ஐக்கியத்தினை வளர்த்தல், இறைபணியில் பெண்களை உற்சாகமாக பங்கு பெற வைப்பதுடன்



முன்னேற்றகரமான ஊழியத்துக்காக பெண்களை ஊக்குவித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தது.

ஆரம்ப வழிபாட்டினை கொழும்பு மற்றும் மலையக பிராந்திய குருமுதல்வர் அருட்கலாநிதி. ராஜன் றொகான் அவர்கள் வழி நடத்தினார். வரவேற்புரை மற்றும் அறிமுக உரையினை பிராந்திய செயலாளர் திருமதி. ஜீவனம் வொட்சன் அவர்கள் நிகழ்த்தினார். "பல்வேறு வழிமுறைகளில்

(11ஆம் பக்கம் பார்க்க)

## பிள்ளைகள் விழா....

(01ஆம் பக்க தொடர்ச்சி)

போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகள் A, B எனும் பிரிவுகளில் நடைபெற்றன. இதில் A பிரிவில் உடுவில், சத்தியபுரம், நவாலி, மானிப்பாய் ஆகிய திருச்சபைகளும் B பிரிவில் தெல்லிப்பளை, ஏழாலை வடக்கு, ஏழாலை தெற்கு, காரைநகர், அராலி, நகர்ப்பணி, நுணாவில், சாவகச்சேரி, அளவெட்டி, குடத்தனை, பண்டத்தரிப்பு ஆகிய திருச்சபைகளும் பங்கேற்றன. இப்போட்டிகளில்

**A பிரிவில் கீர்த்தனைப் பாடல் :**

*முதலாம் இடத்தினை* உடுவில் திருச்சபை
*இரண்டாம் இடத்தினை* சத்தியபுரம் திருச்சபை
*மூன்றாம் இடத்தினை* நவாலி மற்றும் மானிப்பாய் திருச்சபைகள்

ஞானப்பாடல் :

*முதலாம் இடத்தினை* உடுவில் திருச்சபை
*இரண்டாம் இடத்தினை* சத்தியபுரம் திருச்சபை
*மூன்றாம் இடத்தினை* நவாலி திருச்சபை

ஆங்கில பாடல் :

*முதலாம் இடத்தினை* உடுவில் திருச்சபை
*இரண்டாம் இடத்தினை* நவாலி திருச்சபை
*மூன்றாம் இடத்தினை* மானிப்பாய் திருச்சபை

**B பிரிவில் கீர்த்தனைப் பாடல்:**

*முதலாம் இடத்தினை* ஏழாலை தெற்குத் திருச்சபை
*இரண்டாம் இடத்தினை* தெல்லிப்பளை திருச்சபை

ஞானப்பாடல் :

*முதலாம் இடத்தினை* ஏழாலை தெற்குத் திருச்சபை
*இரண்டாம் இடத்தினை* தெல்லிப்பளை திருச்சபை

ஆங்கில பாடல் :

*முதலாம் இடத்தினை* ஏழாலை தெற்குத் திருச்சபை

இறையியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இப்போட்டிகளைத் தொடர்ந்து வேதாகமப் புதிர்ப்போட்டிகளின் இறுதிச் சுற்று நடைபெற்றது.



இப்போட்டிகளை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் மத்திய சமயக்கல்விக் குழுவின் இயக்குநர் அருட்பணி. T. டானியல் ரஞ்சித் அவர்களும் திருச்சபையின் செயலாளர் அருட்பணி. A. B. தேவதாஸ் மற்றும் சேவைத்திருப்பணி மன்ற இணைப்பாளர் திரு. T. யூதராஜா ஆகியோரை நடுவர்களாக கொண்ட அணியினர் சிறப்பாக நடாத்தினார்கள். இப் போட்டிகளில்

**ஆரம்ப பிரிவு**

*முதலாம் இடம்* நவாலி திருச்சபை
*இரண்டாம் இடம்* மானிப்பாய் திருச்சபை

**இடைநிலை கனிஸ்ட பிரிவு**

*முதலாம் இடம்* ஏழாலை தெற்கு திருச்சபை
*இரண்டாம் இடம்* நவாலி திருச்சபை

**இடைநிலை சிரேஸ்ட பிரிவு**

*முதலாம் இடம்* ஏழாலை தெற்கு திருச்சபை
*இரண்டாம் இடம்* மானிப்பாய் திருச்சபை

**மேற்பிரிவு பிரிவு**

*முதலாம் இடம்* மானிப்பாய் திருச்சபை
*இரண்டாம் இடம்* உடுவில் திருச்சபை

இப்போட்டிகளைத் தொடர்ந்து சமயக்கல்விக்குழுவின் இயக்குநர் அருட்பணி. சுதாசினி சுதாகரன் அவர்களின் தலைமையில் பரிசளிப்பு நிகழ்வு ஆரம்பமானது. இந்நிகழ்வுக்கு விருந்தினர்களாக அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. A. S. தேவகுணானந்தன் மற்றும் அவர்களின் பாரியார், திருச்சபையின் செயலாளர் அருட்பணி. A. B. தேவதாஸ், யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. M. D. போல் சுரேஸ், பிராந்திய செயலாளர் திருமதி. R. ஞானதீபம், பிராந்திய பொருளாளர் திருமதி. S. நளாயினி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பிரதம விருந்தினர் அருட்பணி. A. S. தேவகுணானந்தன் அவர்கள் உரை ஆற்றுகையில், இந்நிகழ்வை ஒழுங்கு படுத்திய அனைவருக்கும் பாராட்டுக்களையும் வாழ்த்துதல்களையும் தெரிவித்ததுடன் *நம்பிக்கையுடன் நாட்ட அழைக்கப்படுகின்றோம். நம்பிக்கையுடன் செய்கின்ற எந்த விடயங்களும் கெட்டுப்போவதில்லை, நல்ல விதைகளை நம்பிக்கையுடன் நாட்டுகின்றபோது அது வளர்ந்து பலருக்கு பலன் தருகின்றதாக அமையும், நல்ல விதைகளை நம்பிக்கையுடன் மாத்திரமல்ல ஆழத்திலும் அதை விதைக்க அழைக்கப்படுகின்றோம். இந்த பிள்ளைகள் விழா நம்பிக்கையில் வேரூன்றி செழிப்பு மிக்க விருட்சமாகி நல்ல கனிகளைக் கொடுத்து சமூகத்திற்குச் சாட்சியாக இருக்க அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் சார்பில் அழைக்கின்றேன்* என தெரிவித்தார்.


தொடர்ந்து கடந்த நான்கு ஆண்டுகளாக எமது பிராந்திய சமயக் கல்விக்குழுவின் இயக்குநராக இருந்து சிறப்பாகச் செயற்பட்ட அருட்பணி. சுதாசினி சுதாகரன் அவர்களின் அர்ப்பணிப்புமிக்க சேவையை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இவரை யாழ் பிராந்திய உத்தியோகத்தர்கள் பொன்னாடை போர்த்தியும் மாலை அணிவித்தும் ஞாபகச்சின்னம்



வழங்கியும் கௌரவித்தனர். தொடர்ந்து வெற்றியாளருக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் முன்னதாகவே நடைபெற்ற மனனவசனம், கவிதை, கட்டுரை, சித்திரம், தனிநடனம், தனிப்பாடல், பேச்சு, வினாடிவினா ஆகிய போட்டிகளில் மழலையர் பிரிவு, ஆரம்பப் பிரிவு, இடைநிலை கனிஸ்டப் பிரிவு, இடைநிலை சிரேஸ்ட பிரிவு மற்றும் மேற்ப்பிரிவு ஆகிய தனிநபர் போட்டிகளின் வெற்றியாளர்கள் மற்றும் குழு நிகழ்வுகளின் வெற்றியாளர்களுக்கான வெற்றிச் சான்றுதழ்கள், வெற்றிக்கேடயங்கள், பதக்கங்கள் என்பவற்றினை விருந்தினர்கள் வழங்கி கௌரவித்தனர். மேலும் திருச்சபை வளர்ச்சியையும் எதிர்காலக் கிறிஸ்தவ சமூகத்தையும் கருத்தில் கொண்டு முன்னெடுக்கப்படும் இந் நிகழ்வின் ஏற்பாட்டுக் குழுவினருக்கு உதயதாரகையின் பாராட்டுக்கள்.

# கவிக்களம்

## போட்டி இல.04



மேல் காணும் படத்தினை கருப்பொருளாகக் கொண்டு உங்கள் கவிதைகளை அனுப்பி வையுங்கள். தரமான கவிதைகள் பிரசுரிக்கப்படும்.




சிறந்த ஓர் கவிதைக்கு **நினைவுக் கேடயம்** வழங்கப்படும்.

**அனுப்பவேண்டிய முகவரி**
கவிக்களம், உதயதாரகை
ஆசியா இல்லம், மருதனார்மடம்,
சுன்னாகம்

**மின்னஞ்சல் முகவரி**
themorningstar1841@gmail.com

**Whatsapp**
0773 627 537

**இறுதித் திகதி**
**21.11.2025**

# யாழ் பிராந்திய பிள்ளைகள் விழாவில் முதலாம் இடத்தை பெற்ற கவிதைகள்

## தலைப்பு: நம்பிக்கையுடன் நல்ல விதைகளை நாட்டுவோம்

நல்ல விதை உந்தன் வார்த்தை ஐயா – அதை
நம்பிக்கையோடு நெஞ்சில் நட்டோம் ஐயா
வல்வித்தை கற்றுத் தரும் உங்கள் வேதம் ஐயா
வழியிலே எமக்கெல்லாம் தீபம் ஐயா
விழியேர விதை அல்ல நாமென்றுமே – உங்கள்
விழிக்குள்ளே வாழ்ந்திடும் சேயென்றுமே
வலித்திடும் முற்புதர் நெருக்கினாலும்
வல்லபரன் துணைகொண்டு வென்றிடுவோம்.

**அ. ஆராதனா**
**நவாலி திருச்சபை – ஆரம்ப பிரிவு**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

பொல்லாத மனிதர்கள் மனங்கட்கு இறைவனின்
மகிமையை சாற்றுவோம் – என்றும்
கல்லான இதயங்கள் கொண்டோரை காருண்ணிய
மனிதராய் மாற்றுவோம்
வல்லான் மனம்கொண்டு அல்லாது செய்வோர்க்கு
அறிவுரை ஊட்டுவோம் – மனமெனும்
நல்லான நில்லத்தில் நம்பிக்கையுடன் நல்ல
விதை நாட்டுவோம்

கல்லாதார கற்றோர் எனும்பேதம் சாற்றிடும்
மடமையை போக்குவோம் – பொருள்
இல்லாதார் இருப்போர் எனும்நிலை மாற்றியாவும்
பொதுவுடமை ஆக்குவோம்
வல்லவன் இயேசுவின் வார்த்தையில் வழிநடந்து
முன்னிலை காட்டுவோம் – அதில்
நல்லபலன் தருமென்ற நம்பிக்கையில் விசுவாச
விதைகளை நாட்டுவோம்

தீட்டுவோம் தினம் தினம் தேவனின் மகிமையை
துதிக்கும் நற்பாக்களை – ஒன்று
கூட்டுவோம் மேலோன் மேன்மையை பாடிப்
போற்றிட மக்களை
ஊட்டுவோம் உலகிற்கு உத்தமன் இயேசுவின்
உவமைமிகு கதைகளை – எங்கும்
நாட்டுவோம் நல்லபலன் தருமென்று நம்பிக்கையில்
விசுவாச விதைகளை

**ஏ. அனோறிஷா**
**உடுவில் திருச்சபை – இடைநிலை கனிஸ்ட பிரிவு**

நல்ல விதை விதைத்தால் – நல்ல செடி முளைக்கும்
நல்லெண்ணங்கள் இருந்தால் – வாழ்க்கை பிரகாசிக்கும்

விதைகள் உறங்கினாலும்
விதைத்தவன் உறங்குவதில்லை
இறைமகன் பூமியில் நல்ல விதையாய்
இறங்கியே வாழ்ந்தார் அவனிதனில்

முளைத்து நிற்கவேண்டிய விதைகள்
இன்று இளைத்து நிற்கின்றன
விண்ணோக்கி மரமாக வேண்டிய விதைகள்
இன்று மண்யோக்கி உரமாகின்றன

நாடு முழுவதும் போதிமர விதை விதைத்தாலும்
ஜாதி ஒழியவில்லை பேதம் மறையவில்லை
நல்ல விதைகளாய் மண்ணில் எழவேண்டும்
நம் நாதர் இயேசு நலமே துணை வேண்டும்

நல்ல விதைகளை நம்பிக்கையோடு நாட்டுவோம்
நல்லெண்ணங்களை விதைப்போம் நல்வாழ்வு
– பெறுவோம்
வடலிகள் வானுயரும், வல்ல இறை துணைவரும்
நம்பிக்கையுடன் நல்ல விதைகளை நாட்டுவோம்

**வி. துவாராகா**
**காரைநகர் திருச்சபை – இடைநிலை சிரேஷ்ட பிரிவு**

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

நம்பிக்கையுடன் வாழும் போது
நல்ல பயணம் தொடர்கின்றது
நன்மைகள் பல செய்யும் போது
நன்மையே நிரம்பி வருகின்றது.

எதை நீ செய்கின்றாயோ – வாழ்வில்
ஏமாற்றம் இன்றி பலன் பெறுவாய்
ஏற்றத் தாழ்வுகள் ஏதுமின்றி
எண்ணிய பலனை நீ பெறுவாய்

விதைப்பவன் விதைக்கின்ற போது
விதை நிலம் பார்க்கின்றது
விந்தையான இவ்வுலகில்
வித்தை பல செய்கின்றான் என்று

உன் பலனை நீ எதிர்பார்க்க முன்
உலகமே உன்னை பார்க்கும்
உருண்டோடும் உன் வாழ்வில்
உன் பயன் என்ன

அன்பிகம் எனும் வாழ்வில்
ஆனந்தமாய் வாழ – அனுதினமும்
நல்விதையாம் வேதத்தைக் கற்று
செதுக்கிடுவோம் வாழ்வை நல்மரமாய்

**ஜே. ஜசில்டா**
**சத்தியபுரம் திருச்சபை – மேல் பிரிவு**

# முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

கிழக்குப் பிராந்திய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல் 09.08.2025 அன்று மட்டக்களப்பு பரி.யோவான் மண்டபத்தில் சேவைத்திருப்பணி மன்ற இயக்குநர் திரு. பிரிவீன் யோசெப் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.



இக்கலந்துரையாடலுக்கு முகாமையாளர் அருட்பணி. எஸ். செல்வகுமார் அவர்களும், பிராந்திய பொருளாளர் திரு. டேவிட் அவர்களும் இணைப்பாளர் திரு. த. யூதராஜா அவர்களும் 24 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் இயக்குநர் அவர்களால் **தலைமைத்துவம்** குறித்தான செயலமர்வும், இணைப்பாளர் அவர்களால் **முன்பள்ளி செயற்பாடுகள்** குறித்தான வலுவூட்டல்களும், பொருளாளர் அவர்களால் நிதி முகாமைத்துவம் குறித்த கருத்து பகிர்வும் நடைபெற்றதுடன், ஆசிரியர்களுடனான கலந்துரையாடலும் நடைபெற்று, முன்பள்ளிகளின் தேவைகள் ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சவால்கள் பிள்ளைகளின் கற்றல் இடர்பாடுகள் எனப் பல விடயங்களையும் ஆசிரியர்கள் பகிர்ந்து கொண்டனர்.

இந்த விஜயத்தின்போது மட்டக்களப்பு பரி. யோவான் ஆண்கள் இல்ல தரிசிப்பு, பெரிய நீலவணை ஹேமன் பெண்கள் இல்ல தரிசிப்பு என்பனவும் இடம்பெற்றன. இதன்போது பிள்ளைகளுடன் கலந்துரையாடல் விளையாடுதல் சேர்ந்து உணவருந்துதல் போன்ற விடயங்களுடன் பாதுகாவலர்களுடனான கலந்துரையாடல் மற்றும் தேவை கேட்டறிதல், நிதி முகாமைத்துவம், நிர்வாக சீரமைப்பு, போன்ற விடயங்களும் முன்னெடுக்கப்பட்டன. இந்த பிள்ளைகள் இல்ல தரிசிப்புக்களில் இயக்குநர் திரு. பிரிவீன் ஜோசெப், இல்லங்களின் இணைப்பாளர் அருட்பணி. எஸ். செல்வகுமார், பிராந்திய பொருளாளர் திரு. டேவிட், இணைப்பாளர் திரு .த. யூதராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**திருச்சபையின் வேலை மக்களுக்காக கிறிஸ்துவை மாற்றுவது அல்ல, கிறிஸ்துவுக்காக மக்களை மாற்றுவதேயாகும்.**
**- Dorothy Sayers -**

## இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் ....

(01ஆம் பக்க தொடர்ச்சி)

பணிகள் யாப்பு சீர்திருத்தம் தொடர்பாகவும் தற்கால சூழலில் இலங்கையில் நடைபெறும் பணிகள் குறித்தும் திருச்சபைகளை இலங்கையில் பதிவு செய்தல் குறித்தும் அதிகமாக பேசப்பட்டது. இக்



கூட்டத்தில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் தலைவர் அருட்பணி. ஏ. எஸ். தேவகுணானந்தன் அவர்களுடன் பிரதிநிதிகளாக யாழ் பிராந்தியத்தின் செயலாளர் திருமதி. ஞானதீபம் இராசகாந்தன், CACM மின் உதவி கணக்காளர் செல்வி. சலோமி தேவதாஸ் ஆகியோர் கலந்து கொண்டனர். மதியம் 01:30 மணியளவில் பேராயருடைய ஜெபத்துடனும் இறை ஆசியுடனும் கூட்டம் நிறைவு பெற்றது.

# பாராட்டி வாழ்த்துகின்றோம்




"முயற்சியே உன் வளர்ச்சி"

என்ற அறைகூவலுடன்

31.08.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று

வவுனியா மாநகரசபை மண்டபத்தில்

**அறிவியல் மாற்றம் சமூக மேம்பாட்டு நிறுவனம் SCSDO வின்**

துறை சார் மூத்த இளைய ஆளுமைக்கான

விருது விழாவில்

**"இளம் கலையாளுமை"**

விருதினை பெற்ற

அமெரிக்கன் சிலோன் மிசன்

திருச்சபையின் அருட்பணியாளர்

**அருட்பணி. தங்கதுரை சுசேந்தன்**

அவர்களுக்கு

**உதயதாரகையின் பாராட்டுக்கள்**

# சமயச்சார்பின்மை, சமயச் சுதந்திரம் (FORB)

## குறித்த கல்வித் திறன் வளர்த்தல்

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் சமாதான ஆணையமானது, திருச்சபையின் பொதுச் சாட்சியப் பணிமன்றமாக சமாதான முன்னெடுப்புகள், சமயங்களுக்கு இடையேயான உரையாடல், மற்றும் இலங்கையில் சமயங்கள் மற்றும் சிறுபான்மைச் சமூகங்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் பணிகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டு வருகிறது. இந்த நோக்கத்துடன், இப்பணிமன்றானது தற்போது முன்னெடுத்துவரும் "சமயச்சார்பின்மை மற்றும் சமய சுதந்திரம் (FORB) குறித்த கல்வித்திறன் வளர்த்தல் திட்டம்" என்பது, பன்முக ஜனநாயக மதிப்புகளை ஊக்குவித்து, சமயத் தலைவர்களுடனும், பல் இன சமூகத் தலைவர்களுடனும் இணைந்து பன்முகத் தன்மை கொண்ட சமூகத்தை உருவாக்கி வலுப்படுத்தும் ஒரு முயற்சியாகும்.

சமயச்சார்பின்மை மற்றும் மதச் சுதந்திரம் என்பது மனித உரிமையின் அடிப்படை மட்டுமன்றி, பல்வேறு சமூகங்கள் ஒன்றிணைந்து அமைதியாக வாழ்வதற்கான முக்கிய தூணாகவும் இருக்கிறது. இதனால், இந்தப் பயிற்சி திட்டம், சமயத் தலைவர்கள், திருச்சபை உறுப்பினர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், மற்றும் பொதுநிலையினருக்கு உரிமை அடிப்படையிலான அணுகுமுறைகள் மற்றும் சமாதான உருவாக்க உத்திகள் தொடர்பான அறிவுத் திறன் மற்றும் பரிந்துரை செய்வதற்கான ஆற்றலை வழங்குகிறது. பயிற்சிகளின் மூலம், பல்வேறு சமயமரபுகள், சிந்தனைகள், மற்றும் பண்பாட்டுகளின் விழுமியங்களைப் புரிந்து மதிப்பதற்கும், அதேசமயம் சமயச்சார் எதிரான சவால்கள் மற்றும் அபாயங்களைப் பற்றிச் சிந்திக்கவும் ஊக்குவிக்கப்படுகிறது.

இந்த திட்டம், தென் ஆசிய சமயச்சார்பின்மை மற்றும் சமயச்சுதந்திரம் (SAFFoRB) அமைப்பின் 3,000 யூரோ நிதிஉதவி மூலம் தற்போது நடைமுறைப் படுத்தப்படுகின்றது. இதன் மூலம், இளம் தலைமுறை மேல் சிறப்பு கவனம் செலுத்தி, தெரிந்துக்கொள்ளப்படும் 50 நபர்களைப் பயிற்றுவிக்கும் இலக்கை இது கொண்டுள்ளது. இத்திட்டத்தில், பயிற்சியாளர்கள் இலங்கையின் இரண்டு பிராந்தியங்களில் இருந்து தெரிவுச் செய்யப்பட்டுள்ளனர். • கிழக்கு மாகாணம் – மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்கள் • வடக்குமாகாணம் – யாழ்ப்பாணம் மாவட்டம் பயிற்சிகள், மட்டக்களப்பில் உள்ள ஊறணி புனித யோவான் சமூக மண்டபத்திலும், மற்றும் யாழ்ப்பாணம் மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல்



கல்லூரி மண்டபத்திலும் நடத்தப்பட்டன. இந்த திட்டம் நான்கு பட்டறைகளாக வடிவமைக்கப்பட்டது. மட்டக்களப்பு மற்றும் அம்பாறையில் 31 பேர் பங்கேற்றனர். யாழ்ப்பாணத்தில் 27 பங்கேற்றனர். முதல் இரு பட்டறைகள், FORB பற்றிய அடிப்படைக் கருத்துக்களை அறிமுகப்படுத்தின. சமயச் சுதந்திரத்தைப் பற்றிய சர்வதேச மற்றும் தேசியச் சட்டவழிகள் சமயச்சுதந்திரத்தின் ஏழு பரிமாணங்கள் மற்றும் சுய பரிசோதனையின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்பப்பட்டன. மட்டக்களப்பு அம்பாறை மாவட்டப் பயிற்சியாளருக்கான கற்கைநெறி- புனித யோவான் வளாகம், ஊறணியில் நடைபெற்ற குழுக் கலந்துரையாடல்களில், FORB இலங்கையில் எவ்வாறு நடைமுறையில் உள்ளது என்பதையும், அதன் வாய்ப்புகளை தவறாகப் பயன்படுத்தப்படும் அபாயங்களையும் பங்கேற்பாளர்கள் பகிர்ந்து ஆராய்ந்தனர். இதன்பின் மூன்றாம், நான்காம் பட்டறைகளும் நடைபெற்றன.

பிராந்தியப் பணிமன்றம் மற்றும் CACM நிதிக் குழு ஆகிய மன்றுகளின் ஒத்துழைப்பினாலும்



திரு. எஸ். சொர்ணலிங்கம் (மட்டக்களப்பு), திரு. முகமது ஜவாஹிர் (காத்தான்குடி), மற்றும் திரு. ஹாசிம் சாலிஹ் (அக்கறைப்பற்று), ஆகியோரது கருத்துரைகளினாலும், அருட்கலாநிதி. ராஜன் றோகான் அவர்களது தலைமைத்துவத்தினாலும் திரு. பிரிவீன் ஜோசப் (சேவைத் திருப்பணி மன்றப் பதில் இயக்குநர்) அவர்களது ஒத்துழைப்பினாலும், திரு. அகமது எஸ். ஹக்கானி (SAFFoRB இலங்கை திட்ட உதவியாளர்) அவர்களின் ஆலோசனையினாலும் வழிநடாத்துதலினாலும் இவை சிறப்புற நடந்தேறின. யாழ் மாவட்டப் பயிற்சியாளருக்கான கற்கைநெறி மருதனார்மடம் இறையியல் கல்லூரியில் சிறப்புற நடந்தேறியமை குறிப்பிடத்தக்கது.

இதனடிப்படையில், சமயச்சார்பின்மை மற்றும் சமயச்சுதந்திரம் குறித்த பயிற்சிநெறி இலங்கையில் சமயங்களுக்கு இடையேயான புரிந்துணர்வையும், ஜனநாயக மதிப்புகளையும் வலுப்படுத்துவதில் தனது தாக்கத்தை நிரூபித்துள்ளது. மதத் தலைவர்களும் சிவில் சமூக உறுப்பினர்களும், குறிப்பாக இளைஞர்கள், குறிப்பிட்ட தலைப்பு தொடர்பான அறிவு, நடைமுறைக்கான வழிமுறைகள் மற்றும் வலையமைப்புகளுடன் ஆயத்தப்படுத்தப்படலுக்கான பொறிமுறைகளையும் சட்டரீதியான படிமுறைகளையும் கற்றுக்கொண்டனர். மேலும் பன்முகத்தன்மை மதிக்கப்படுதல், மனிதமாண்பு காக்கப்படுதல், ஊடாக சமாதானமும் நீதியும் உள்ள கூட்டுவாழ்வியல் கலாச்சாரத்தை கட்டியெழுப்புவது அனைவரின் கூட்டுப் பொறுப்பாகும். அவ்வாரான ஒருசமூகத்தை உருவாக்கும் தரிசனத்துடன் CACM சமாதான ஆணையம் தொடர்ந்து தம்மை அர்ப்பணித்துள்ளது.

## சர்வதேச தினங்கள்

| | |
|---|---|
| மார்ச் 8 | மகளிர் தினம் |
| ஏப்ரல் 23 | புத்தக தினம் |
| மே 8 | செஞ்சிலுவை தினம் |
| மே 12 | தாதியர் தினம் |
| மே 17 | தகவல் தினம் |
| ஜூன் 5 | சூழல் தினம் |
| ஜூன் 20 | அகதிகள் தினம் |
| செப்டம்பர் 8 | எழுத்தறிவு தினம் |
| செப்டம்பர் 21 | சமாதான தினம் |
| ஒக்டோபர் 1 | முதியோர் / சிறுவர் தினம் |
| ஒக்டோபர் 6 | ஆசிரியர் தினம் |
| ஒக்டோபர் 9 | தபால் தினம் |
| ஒக்டோபர் 16 | உணவு தினம் |
| ஒக்டோபர் 24 | ஐக்கிய நாடுகள் (ஐ.நா) தினம் |
| டிசம்பர் 03 | மாற்றுத்திறனாளிகள் தினம் |
| டிசம்பர் 10 | மனித உரிமைகள் தினம் |

## நீ விசேடமானவன் (ள்) ...

(01ஆம் பக்க தொடர்ச்சி)

இணைத்து செப்டம்பர் மாதம் 05ம் திகதியிலும் நடைபெற்றுள்ளன.

### யாழ் மற்றும் வன்னி பிராந்தியங்கள்

மேற்படி நிகழ்வானது இருநாட்களிலும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் நடாத்தப்பட்டது.

இதனை இந்த ஆண்டு நடத்துவதற்கான வளவாளர்களாக SCA Mission (Srilankan Church Association) என்ற ஸ்தாபனத்தினர் எம்மோடு இணைந்துகொண்டனர். பிள்ளைகளிற்கு திருமறைப் படிப்பு, பாடல்கள், ஆக்கவேலை, நிறம் தீட்டல், குழுச் செயற்பாடுகள், விளையாட்டுக்கள் போன்றவற்றை உள்ளடக்கிய இவ் விடுமுறை கால வேதாகம கற்றல் செயற்பாட்டு நிகழ்வு பிள்ளைகளுக்கு பயனுள்ளதாக நடாத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் இரு பிராந்தியங்களிலிருந்தும் 108 பிள்ளைகள் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தார்கள்.

### கொழும்பு மற்றும் மலையக பிராந்தியம்

கொழும்பு மற்றும் மலையக பிராந்திய ஞாயிறு பாடசாலை சிறுவர்களுக்கான விடுமுறை வேதாகமப் பாடசாலை ஆகஸ்ட் மாதம் 16 மற்றும் 17ம் திகதிகளில் உடம்புசலாவை எமஸ்ட் புனித அந்திரேயா தேவாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கொழும்பு திருச்சபை, எமஸ்ட் புனித அந்திரேயா திருச்சபை, எனிக் கிறிஸ்து இரட்சகர் ஆலயம், கோட்லோஜ் நற்தூது பணியகம் ஆகிய இடங்களில் இருந்து 142 பேர் பங்கு பற்றினர்.



இவற்றில் 117 சிறுவர்கள், 13 ஞாயிறு பாடசாலை ஆசிரியர்கள், 9 சபை உறுப்பினர்கள் மற்றும் 3 அருட்பணியாளர்கள் ஆர்வத்துடன் கலந்துக்கொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். நீ சிறப்பானவன் என்னும் தலைப்பில் புதிய பாடல்கள், விளையாட்டுகள், கூட்டுச் செயல்பாடுகள் மற்றும் திருமறை கதைகளுக்கூடாக சிறுவர்கள் திருமறை உண்மைகளைக் கற்றுக் கொண்டனர்

### கிழக்குப் பிராந்தியம்

கிழக்குப் பிராந்திய ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகளிற்கான ஒரு நாள் விடுமுறை வேதாகமப் பாடசாலை பரி. யோவான் ஆலய மண்டபத்தில் 05.09.2025 அன்று சிறப்பாக நடைபெற்றது.

இந் நிகழ்வானது சிறப்பாக நடைபெறுவதற்கு இயேசுசகாயம் குழுவினர்கள் (கிறிஸ்தாலய அக்கடமி - மெதடிஸ்த திருச்சபை – கிரான்) வளவாளர்களாக வருகைதந்து பிள்ளைகளுக்கு ஆடல் பாடல் மற்றும் வேதாகமக் கதைகள் என்பனவற்றினை உள்ளடக்கி சிறப்பாகக் கற்றுக்கொடுத்தார்கள்.



இவ் விடுமுறை வேதாகம பாடசாலையில் கிழக்கு பிராந்தியத்தின் அனைத்து திருச்சபைகளில் இருந்தும் 98 பிள்ளைகளும் இவர்களுடன் ஆசிரியர்களும் பெற்றோர்களும் உற்சாகமாக இணைந்து பங்குகொண்டார்கள். அத்தோடு கிழக்குப் பிராந்திய அனைத்து அருட்பணியாளர்களும் கலந்து சிறப்பித்தார்கள். கிழக்குப் பிராந்திய சமயக் கல்விக் குழுவின் இணைப்பாளர் அருட்பணி. எஸ். டானியல் செல்வகுமார் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் இவ் விடுமுறை வேதாகம பாடசாலை சிறப்பாக நடைபெற்றது.

மேலும் இவ்வனைத்து விடுமுறை வேதாகம பாடசாலை நிகழ்வினை முன்னெடுத்த மத்திய சமயக் கல்விக்குழுவினருக்கும் அதன் இயக்குநர் அருட்பணி. ரி. டானியல் ரஞ்சித் அவர்களுக்கும் உதயதாரகையின் பாராட்டுக்கள்.

## கிறிஸ்த சேவ ஆச்சிரமத்தின் 86வது அகவை

மருதனார்மடம், கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் 86வது ஆண்டு விழா கடந்த ஆகஸ்ட் மாதம் 21ஆம், 22ஆம், 23ஆம், 24ஆம் திகதிகளில் சிறப்பாக நடைபெற்றது. கிறிஸ்தவ சேவ ஆச்சிரமத்தின் பிராத்திஸ்டை நாளாகிய (1939) 21ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு நற்கருணை வழிபாடுடன் விழா ஆரம்பமானது. இவ் வழிபாட்டை தென்னிந்திய திருச்சபைப் பேராயர் பேரருட்கலாநிதி. வே. பத்மதயாளன் அவர்கள் நடத்தினார். இரண்டாம் நாள் நடைபெற்ற நற்கருணை வழிபாட்டை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் அருட்பணியாளரான அருட்பணி. டி. எஸ். மதியாபரணம் அவர்கள் நடத்தினார்.

23ஆம் திகதி காலை 7.30 மணிக்கு நடைபெற்ற நற்கருணை




வழிபாட்டையும் திருமறைப் படிப்பையும் இலங்கை திருச்சபையின் முன்னாள் யாழ் மற்றும் நுவரெலியா குருமுதல்வர் அருட்திரு. எஸ். பி. நேசகுமார் அவர்கள் நடத்தினார். அதனைத் தொடர்ந்து ஆச்சிரம வரலாற்றை இலங்கை திருச்சபையின் அருட்பணியாளரான அருட்திரு. ஸ்டீபன் அருளம்பலம் அவர்கள் எடுத்துரைத்தார்.

ஐக்கிய மதிய உணவின் பின்னர் மாலை 2.00 மணிக்கு கலை நிகழ்ச்சி நடைபெற்றன. இதில் பல திருச்சபைகள் நிகழ்ச்சிகளை கொடுத்து ஆண்டு விழாவைச் சிறப்பித்தனர். இவ்வாறு சிறப்புடன் நடைபெற்ற 86வது



ஆண்டு விழாவானது அருட்பணி. தயாளகுணசீலன் ஜெரோம் ரம்மியகாந் (ஜெரோம் அண்ணன்) அவர்களின் தலைமையில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



## CACM திருச்சபை..

(01ஆம் பக்க தொடர்ச்சி)

ஆரம்பமானது. இவரைத் தொடர்ந்து திருச்சபையின் தலைமைத்துவத்துக்கு அருட்கலாநிதி. செரி பிறிஸ்மன் அவர்கள் தெரிவு செய்யப்பட்டார். இக்கூட்டத்தில் பாலஸ்தீனத்துக்கு எதிரான போரை இஸ்ரேல் நிறுத்த வேண்டும் என்பதற்காகவும், இந்தியாவில் சிறுபான்மை சமயங்களுக்கெதிரான அடக்குமுறையினை இந்திய அரசு முடிவுக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகவும் பிலிப்பின்ஸ்



நாட்டில் சிறுபான்மையினருக்கு எதிரான அடக்குமுறைகள் நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காகவும் பிரேரணைகள் நிறைவேற்றப் பட்டன. ஏழு நாட்கள் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 7.30 மணி வரை நடைபெற்ற இக்கூட்டங்களுக்கு எமது தெல்லிப்பளைத் திருச்சபையினை பூர்வீக அங்கத்தவர்களான திரு. திருமதி. சின்னத்துரை அவர்களுடைய மகன் அருட்கலாநிதி. றொசான் சின்னத்துரை



அவர்கள் தலைமை தாங்கினார். இது எமது திருச்சபைக்கும் அனைத்து மக்களுக்கும் பெருமை தரும் விடயமாகும். இந்த மகாசபைக் கூட்டங்களில் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினுடைய தலைவர் அருட்பணி. A. S. தேவகுணானந்தன் அவர்களும் கலந்து கொண்டார் என்பது எமது திருச்சபை வரலாற்றில் மைற்கல்லாக அமைந்துள்ளது. மேலும் அவருடன் UCC யினுடைய உலகளாவிய பங்காளித்துவத் திருச்சபைகளினுடைய தலைவர்களாக இந்தோனேசியாவைச் சேர்ந்த எம். எம். ஜக்கி, பிலிப்பீன்ஸ் நாட்டினைச் சேர்ந்த ஜோர்ஜ் லொங்கி, பலஸ்தீனாவைச் சேர்ந்த மயாடா டறாசி, கொலம்பியாவைச் சேர்ந்த பப்லோ, ஜேர்மனியைச் சேர்ந்த பேராயர் பிராங் கொப்பனியா மற்றும் ஊட்டே ஹெட்றிஜ், தென்னாபிரிக்க நாட்டினைச் சேர்ந்த குட்சாணி ஆகியோரும் கலந்து கொண்டனர் என்பது சிறப்பம்சமாகும்.

## எண் கணிதம்

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 23 | | 40 | | | | |
| | | | | − | | − | | | | |
| | ÷ | | = | 7 | | | ÷ | 2 | = | |
| + | | | | = | | = | | | | − |
| 26 | | | + | | = | | | | | |
| = | | | | | | | | | | = |
| 47 | + | 19 | = | | | 14 | − | 11 | = | |
| | | + | | − | | | | + | | |
| | | | | | + | 9 | = | 19 | | |
| | | = | | = | | | | = | | |
| 83 | − | 27 | = | | | 23 | + | | = | 53 |

குறிப்பு : இது போட்டிக்கான கேள்வி அல்ல

## ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு

அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் மத்திய சமயக் கல்வி குழுவின் ஏற்பாட்டில் ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு ஆகஸ்ட் மாதம் 8ம், 9ம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

வன்னிப் பிராந்திய ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு 08.08.2025 அன்று கிளிநொச்சி கிறிஸ்து அரசர் ஆலயத்திலும் யாழ்,



கிழக்கு, கொழும்பு மற்றும் மலையகம் ஆகிய பிராந்தியங்களின் ஞாயிறு பாடசாலை ஆசிரியர்களுக்கான செயலமர்வு 09.08.2025 அன்று மருதனார்மடம் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியிலும் நடைபெற்றது.

இதன் பிரதம வளவாளராக திருமதி. வனஜா இராஜ்குமார் அவர்கள் பங்குபற்றி ஞாயிறு பாடசாலை பிள்ளைகளுக்கான கற்பித்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பது தொடர்பான செயல்முறை விளக்கங்களுடன் இக் கருத்தரங்கினை சிறப்பாக நடாத்தியிருந்தார்.

வன்னிப் பிராந்தியத்தில் நடைபெற்ற செயலமர்வில் 36 ஆசிரியர்களும் 3 குருவானவர்களும் பங்குபற்றியிருந்தார்கள். அதேவேளை யாழ், கிழக்கு, கொழும்பு மற்றும் மலையகம் ஆகிய பிராந்தியங்களுக்கான



செயலமர்வில் சேர்ந்த 29 ஆசிரியர்களுடன் 2 குருவானவர்களும் பங்குபற்றியிருந்தார்கள்.

மேலும் இவ்விரு செயலமர்வுகளும் அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் சமயக் கல்வி குழுவின் இயக்குநர் அருட்பணி. தனராஜாசிங்கம் டானியல் ரஞ்சித் அவர்களின் தலைமையில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## மூலோபாய திட்ட...

(01ஆம் பக்க தொடர்ச்சி)

தங்கியிருந்து இறையியல் கல்லூரியின் ஆளுநர் சபை உறுப்பினர்களுடனும், அங்கிலிக்கன், மெதடிஸ்த, மற்றும் இதர சபைகளின் குருவானவர்களோடும், கல்லூரியின் விரிவுரையாளர்களோடும், அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் நிர்வாகத்தினரோடும் இணைந்து திட்டமிடலினை நடைமுறைப் படுத்தினார்கள்.

இத்திட்டமிடலின் அடிப்படையில் கிறிஸ்தவ இறையியல் கல்லூரியானது ஆசியாவிலே இருக்கின்ற இறையியலாளர்கள் மற்றும்



இறையியலை கற்றுக் கொள்பவர்களுக்கான ஒரு வளமிக்க இறையியல் கல்விக் கூடமாக உருவாக்கும் நடவடிக்கையில் ஈடுப்பட்டனர். இவ் மூலோபாய திட்டமிடலில் ஏறத்தாள 30 பேர் கலந்து கொண்டு பல நன்மையான கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்கள்.

இந்தியாவில் இருந்து வருகை தந்த வளவாளர்கள் மிகச் சிறப்பான முறையில் மூன்று நாள் கருத்தரங்குகளையும் நெறிப்படுத்தி, எதிர் காலத்திலே இறையியல் கல்லூரியானது பல வெற்றிப் பாதையில் பயணிக்கக் கூடிய நடைமுறை சார் ஆலோசனைகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.

கிறிஸ்தவ இறையியல் கல்லூரியின் அதிபர் இவ் மூலோபாய திட்டமிடல் கருத்தரங்கினை வழிப்படுத்தினார். இக்கருத்தரங்கானது இறையியல்



கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மூலோபாக திட்டமிடலின் முதற் பகுதியாக இக்கருத்தரங்கு அமைகின்றது.

## கொழும்பு மற்றும் மலையக...

(07ஆம் பக்க தொடர்ச்சி)

இறைபணியில் ஈடுபடுவதற்காக பெண்களுக்கான அழைப்பு'' எனும் பொருளில் திருமறைப் படிப்பினை செல்வி. சாந்தி பொன்னு அவர்களும் ''வளங்களை பயன்படுத்துதல் மற்றும் சக்தியளித்தல்'' எனும் பொருளில் கருத்தரங்கு ஒன்றை திருமதி. வசந்தி ராஜரட்ணம் அவர்களும் மேற்கொண்டார்கள். கொழும்பு மற்றும் மலையக பிராந்தியத்தில் பெண்கள் பணியை முன்னெற்றுவதற்கான செயற்திட்டம் ஒன்றினை அருட்கலாநிதி. ராஜன் றொகான் அவர்கள் சமர்ப்பித்தார்.

இரண்டாம் நாள் அமர்வு வழிபாட்டினை பிராந்திய பெண்கள் சங்கத்தின் நடத்தினர். துதி வழிபாட்டினை திருமதி. சாந்தி நந்தகுமார், திருமதி. ஜி. தேன்மொழி, திருமதி. ஆர். சத்தியவாணி, செல்வி. செலானி மற்றும் திருமதி. வினோ ஆகியோர் இணைந்து நடத்தினர். துன்புறுத்தல், எதிர்ப்புகள் மத்தியில் ஆதிகால திருச்சபையின் பெண் தலைமைத்துவம், அர்ப்பணிப்பு மற்றும் நற்செய்தி வாஞ்சை பற்றி அருட்கலாநிதி. ராஜன் றொகான் அவர்கள் மறையுரையாற்றினார். மேலும் விசேட ஜெபத்தில் அருட்பணி. என். கங்கா பிரசாந் அவர்கள் வழிநடாத்தினார். நிகழ்வின் இறுதியில் திருமதி. நிர்மலின் நியூட்டன், திருமதி. ஆர். சத்தியவாணி மற்றும் திருமதி. அனுஷா



அலோசியஸ் ஆகியோர் குழுக்களின் தலைவர்களாக தமது தொகுப்புரையினை வழங்கினர். நிகழ்வின் நிறைவில் உடப்புசலாவ மற்றும் கந்தபொலவில் இருந்து வருகைதந்தோருக்கான நினைவுப் பரிசில்கள் சீ.ஏ.சீ.எம் கொழும்பு பெண்கள் ஐக்கியம் சார்பாக வழங்கப்பட்டது. இந்நிகழ்வினை திருமதி. ஏ. டிலித்திரா, திருமதி. என். சாந்தி ஆகியோர் தொகுத்து வழங்கினர். பின்வருவோருக்கு மனதார நன்றிகள் கூறப்பட்டது. திரு. திருமதி. ரமேஸ்குமார், திரு. டி. றோய்ஸ், டாக்டர். திருமதி. ரதனி, திருமதி. பத்மினி ஆனலட், திருமதி. சுபோசினி வணிகரட்ணம், திருமதி. மனோ அருளானந்தம், திரு. திருமதி. றோய் விஜயரட்ணம் மற்றும் கொழும்பு பெண்கள் சங்கம்.

# திருமறையின் வரலாற்றில் இடம் பிடித்த பெண்கள்

சிபில் தேவகி ஞானபிரகாசம்

## தீர்க்கதரிசியின் மனைவி

(Wife of a Prophet)

*"தீர்க்கதரிசிகளுடைய புத்திரரில் ஒருவனுக்கு மனைவியாக இருந்த ஒரு பெண் எலிசாவைப் பார்த்து, உமது அடியானாகிய என் கணவன் இறந்துபோனான். உமது அடியான் கர்த்தருக்குப் பயந்து நடந்தான் என்பதை நீர் அறிவீர் ".* (2 இராஜாக்கள் 04:01)



இங்கு ஒரு தீர்க்கதரிசியினுடைய குடும்பத்தின் நிலை குறித்துக் கூறப்படுகின்றது. இங்கு அந்தத் தீர்க்கதரிசியினுடைய பெயரோ, தீர்க்கதரிசியினுடைய மனைவியின் பெயரோ எதுவும் குறிப்பிடப்படவில்லை. இந்தத் தீர்க்கதரிசியினுடைய குடும்பம் அறியப்படாத குடும்பமாக இருந்தாலும் கடவுள் இந்தக் குடும்பத்திலே அற்புதமான காரியங்களைச் செய்துள்ளார். இந்தத் தீர்க்கதரிசியினுடைய மனைவி, தன்னுடைய கணவனைக் குறித்துக் கூறுகையில், ***"உமது அடியானாகிய என் கணவன் கர்த்தருக்குப் பயந்து நடந்தான்"*** என்று சாட்சியாகக் கூறினாள்.

அந்தத் தீர்க்கதரிசியின் மரணத்துக்குப் பிறகு அந்தக் குடும்பத்தைக் கடன்தொல்லை வாட்டியெடுத்தது. அது மாத்திரமல்லாமல் அவளுடைய பிள்ளைகளும் அநாதைகளாக வாழவேண்டிய ஒரு வேதனையான சூழ்நிலை ஏற்பட்டது. ஆனாலும் கடவுள் அக்குடும்பத்தைக் கைவிடவில்லை. அந்தக் குடும்பத்தினுடைய தலைவனாகவும் தீர்க்கதரிசியாகவும் கர்த்தருக்குப் பயந்து வாழ்ந்த அந்த மனிதனின் நிமித்தம் அந்தக் கடனைத் தீர்க்கும்படிக்கு கடவுள் புதியதொரு வழியினை அப்பெண்ணுக்குக் காண்பித்தார்.

அந்தப் பெண் ஒரு நாள் இப்படியான சூழ்நிலையில் எலிசா தீர்க்கதரிசியைச் சந்திக்கிறாள். அவள் எலிசாவிடம் *"உமது அடியானாகிய என்னுடைய கணவன் இறந்து போனான். கடன் கொடுத்தவன் இப்போது என்னுடைய இரண்டு ஆண் பிள்ளைகளையும் தனக்கு அடிமையாக்கிக் கொள்ள வந்தான்"* என்று கூறினாள். அதற்கு எலிசா அவளை நோக்கி *''நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்: உன் வீட்டிலே உன்னிடத்தில் என்ன இருக்கிறது? சொல்"* என்றான்.

அதற்கு அவள் *"ஒரு குடம் எண்ணெயை அல்லாமல் உமது அடியாளுடைய வீட்டில் வேறு ஒன்றும் இல்லை"* என்றாள். அப்பொழுது எலிசா *"நீ போய் உன்னுடைய அயல் வீட்டுக்காரர் எல்லாரிடத்திலும் அநேகம் வெறும் பாத்திரங்களைக் கேட்டு வாங்கி, உள்ளே போய், உன் பிள்ளைகளுடன் உள்ளே நின்று, கதவைப்பூட்டி, அந்தப் பாத்திரங்கள் எல்லாவற்றிலும் எண்ணெயை வார்த்து, நிறைந்ததை ஒரு பக்கத்தில் வை"* என்றான்.

அப்பெண் எலிசாவிடம் விடைபெற்றுச் சென்று எலிசா சொன்னபடியெல்லாம் செய்தாள். அப்பாத்திரங்களிளெல்லாம் அமுதசுரபி போன்று எண்ணெய் நிறைந்து வழிந்தது. எல்லாம் நிறைந்தபின் அவள் தன்னுடைய மகன் ஒருவனை நோக்கி *"இன்னும் ஒரு பாத்திரம் கொண்டு வா"* என்றாள். அதற்கு அவன் *"வேறே பாத்திரம் இல்லை"* என்றான். அப்பொழுது எண்ணெய் பெருகுவதும் நின்று போயிற்று. இந்தப் பெரிய அற்புதத்தைக் கடவுள் அப்பெண்ணுடைய வீட்டில் செய்து நிறைவேற்றினார்.

அதன்பின்னர் அவள் எலிசாவிடம் போய் நடந்ததெல்லாவற்றையும் கூறினாள். அப்பொழுது எலிசா *"நீ போய் அந்த எண்ணெயை விற்று, உன் கடனைத் தீர்த்து, மீந்ததைக் கொண்டு, நீயும் உன் பிள்ளைகளும் ஜீவனம் பண்ணுங்கள்"* என்றான். அந்தப் பெண் அவ்வாறே அந்த எண்ணெயை விற்று, கடனைத் தீர்த்துப் பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக வாழ்ந்தாள்.

**திருமறை ஆதாரங்கள்**

01. 2 இராஜாக்கள் 04:01-07 - கைம்பெண்ணுக்கு உதவி செய்தல்
02. சங்கீதம் 128:04 - ஆண்டவருக்கு அஞ்சி நடத்தல்
03. சங்கீதம் 115:13 - ஆண்டவரே உண்மையான கடவுள்

## முன்பள்ளி....

(06ஆம் பக்க தொடர்ச்சி)

குருமுதல்வர் அருட்பணி. யோ. நிவில் ரூபராஜ் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

இங்கும் அனைத்து நிகழ்வுகளும் குழு நிகழ்வுகளாகவே நடைபெற்றன. இதன் மூலம் பிள்ளைகள் சந்தோசித்து மகிழ்ந்திருந்தனர். விஷேடமாக பிள்ளைகளுக்கிடையில் நடைபெற்ற கயிறுழுத்தல் நிகழ்வானது அனைவரது கவனத்தையும் ஈர்த்தது. வேடம் பூணுதல் (வினோத உடை) பிள்ளைகள் பங்கேற்று பலவிதமான வேடங்கள் தரித்திருந்தனர் பிள்ளைகளின்



விளையாட்டுக்கள், வேடம் பூணுதல், பெற்றோர் விளையாட்டு, விருந்தினர் விளையாட்டு, விருந்தினர்கள் உரை, அனைத்து பிள்ளைகளுக்குமான பரிசில் வழங்கும் நிகழ்வு என அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக நடைபெற்றன.

## சத்தியபுரம் தூய பவுல் ஆலயத்தின் 41வது ஆண்டு விழாவும் கிறிஸ்தவ கரோக்கி பாடல் போட்டியும்

சத்தியபுரம் தூய பவுல் ஆலயத்தினுடைய 41வது ஆண்டு நிறைவு நன்றி செலுத்தும் வழிபாடு 05 அக்டோபர் 2025 அன்று காலை 7:30 மணிக்கு சத்தியபுரம் ஆலயத்தில் திருவிருந்து வழிபாடாக நடைபெற்றது. இவ் வழிபாட்டினை அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையின் யாழ் பிராந்திய குருமுதல்வர் அருட்பணி. எம். டி. போல் சுரேஸ் அவர்கள் சத்தியபுரம் திருச்சபையின் அருட்பணியாளரான அருட்பணி. கே. அன்ரூ ஜெயானந்தம் அவர்களுடைய உதவியுடன் நடத்தினார். இவ் வழிபாட்டில் திருச்சபையின் மக்கள் அனைவரும் குடும்பமாக கலந்து கொண்டு இறையாசினை பெற்றுக் கொண்டனர்.

அன்றைய தினம் மாலை 5:00 மணிக்கு சத்தியபுரம் திருச்சபையின் வாலிபர்களுடைய புதிய முயற்சியாக கரோக்கி இசையுடனான கிறிஸ்தவ பாடல் போட்டி மிகப் பிரம்மாண்டமான அளவில் நடைபெற்றது. இப்போட்டியில் பல்வேறு திருச்சபையை சேர்ந்த 38 வாலிபர்கள் மற்றும் சிறுவர்கள் கலந்து கொண்டதுடன் பல்கலைக்கழக இசைத் துறையின் துறைசார் நடுவர்கள் மத்தியஸ்தம் வகித்தனர். யாழ் பிராந்திய குருமுதல்வர் அமெரிக்கன் சிலோன்





மிசன் திருச்சபையின் தலைவரும் செயலாளரும் பிரதம விருந்தினராக கலந்து கொண்டதுடன் வேறு அனேக குருமாரும் சகோதரச் சபையைச் சேர்ந்த மக்களும் ஊர் மக்களும் கலந்து கொண்டனர். இப்போட்டியில் பின்வருவோர் 01ம், 02ம், 03ம் இடங்களை பெற்றுக்கொண்டனர்.

**ஜூனியர் பிரிவு**

முதலாம் இடம் - செல்வன். சாம் ஆதவன் (ஏழாலை தெற்கு CACM)
இரண்டாம் இடம் - செல்வி. பி. சிறொமிக்கா (சத்தியபுரம் CACM)
மூன்றாமிடம் - செல்வி. ஆன்கிறிஸ்டினா (அக்கராயன் CACM)

**சீனியர் பிரிவில்**

முதலாம் இடம் - செல்வி. ஜ. ஒலன்ரினா (அப்போஸ்தலர் சபை உடுவில்)
இரண்டாம் இடம் - செல்வன். த. டானியல் யனுதாஸ் (அராலி CACM)
மூன்றாம் இடம் - செல்வி. எஸ். ரஜிதா (சத்தியபுரம் CACM)

41வது ஆண்டு விழா நிகழ்வுகள் அனைத்தும் இரவு 09:30 மணியளவில் சபைக்குருவின் இறை ஆசியுடன் நிறைவுபெற்றது.

இப்பத்திரிகையானது ஆனைக்கோட்டையில் அமைந்துள்ள றூபன் அச்சகத்தில் அச்சிடப்பட்டு,
10.10.2025 திகதி அமெரிக்கன் சிலோன் மிசன் திருச்சபையினாரால் வெளியிடப்பட்டது.